REGISTERED AS NEWSPAPER

# உதயன்

பக்கங்கள் - 20 விலை - 30 ரூபா செய்தி: 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

சுடர் : 35 கதிர் : 342 ஐப்பசி 22 ஆம் நாள் சனிக்கிழமை 07 நவம்பர் 2020 வள்ளுவர் ஆண்டு 2051

## கொரோனாவால் இளைஞர் சாவு!

**உயிரிழப்பு 30**

கொழும்பு, நவ. 7
இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் நேற்றும் ஒருவர் உயி 18 ▶

## மக்களைச் சாகடிக்காதீர்கள்; நாட்டை உடன் முடக்குங்கள்!

*அரசிடம் எதிர்க்கட்சித் தலைவர்கள் கூட்டாகக் கோரிக்கை*

கொழும்பு, நவ. 7
"மக்களின் ஆணையுடன் ஆட்சிக்கு வந்த அரசு, கொரோனா என்ற கொடிய தொற்று நோய்க்குள் அவர்களைச் சாகடிப்பது மாபெரும் குற்றமாகும். முழு நாட்டையும் குறைந்தது இரு வாரங்களுக்காவது முடக்கி கொரோனாத் தொற்றுப் பரவலுக்கு அரசு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்."

இவ்வாறு எதிர்க்கட்சிகளின் தலைவர்கள் கூட்டாகக் கோரிக்கை விடுத்துள்ளனர். இது தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஐக்கிய மக்கள் 18 ▶

## சாவுகளையும் சந்தித்துத்தான் கொரோனாவை விரட்ட முடியும்

*இராணுவத் தளபதி விளக்கம்*



கொழும்பு, நவ. 7
"நாட்டின் தற்போதைய நிலைமையில் உயிரிழப்புகளையும் சந்தித்துத்தான் 18 ▶

### கச்சேரிக் கூட்டத்தில் கலந்துகொண்ட பிரதேச செயலரை

# தனிமைப்படுத்துக!

பிரதேச மருத்துவ அதிகாரி

# உடன் விடுவிக்குக!

சுகாதார திணைக்கள பணிப்பாளர்

யாழ்ப்பாணம், நவம்பர் 7
மேல் மாகாணத்திலிருந்து வந்தவர்கள் கலந்து கொண்ட கூட்டத்தில் கலந்து கொண்டமையாலும், சுகாதார விதிமுறைகளை மீறி இடம்பெற்ற கலந்துரையாடலில் பங்கேற்றமையாலும் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த பிரதேச செயலாளர் ஒருவரை, அந்தப் பகுதிக்குப் பொறுப்பான மருத்துவ அதிகாரி 14 நாள்கள் தனிமைப்படுத்த நடவடிக்கை எடுத்திருந்தார். 18 ▶

## நேற்றும் 400

18 ▶

### மானிப்பாய் கடைக்குள் கும்பல் அடாவடி

*மாட்டிக்கொண்டார் ஒருவர்*

யாழ்ப்பாணம், நவ. 7
மானிப்பாயில் வர்த்தக நிலையம் ஒன்றுக்குள் புகுந்த வன்முறைக் கும்பல், கடை உரிமையாளரைத் தாக்கியதோடு 18 ▶



'பட்டா' வாகனத்தில்

### சோளம் வியாபாரி சடலமாக மீட்பு

வவுனியா, நவ. 7
வவுனியா கனகராயன்குளம் பகுதியில் பட்டா ரக வாகனத்திலிருந்து சடலம் ஒன்றை பொலிஸார் நேற்று மீட்டுள்ள 18 ▶

தனிமைப்படுத்தப்பட்டுள்ளவரை

### அடிக்கச் சென்றவர் குடும்பத்துடன் தனிமை

பருத்தித்துறை, நவ.7
தனிமைப்படுத்தப்பட்டிருந்தவரை தாக்க முயன்றவர் குடும் பத்துடன் தனிமைப்படுத்தப்பட்டுள் 19 ▶



*முச்சந்தி முரளி*

"சண்டையெண்டா சட்டை கிழியத்தானே செய்யுமெண்டுற மாதிரி உவர் கொரோனாவை ஒழிக்கேக்க சாவும் வருமெண்டு சிம்பிளாச் சொல்லுறார் பாருங்கோ"

### ஜனவரி 18இல் சா/த. பரீட்சை

கொழும்பு, நவ. 7
கல்விப் பொதுத் தராதர சாதாரண தர பரீட்சை எதிர்வரும் ஜனவரி 18ஆம் திகதி ஆரம்பமாக 18 ▶

## 15 நாள்களில் 17 பேர் சாவு

கொழும்பு, நவ.7
நாட்டில் கடந்த 23ஆம் திகதி முதல் நேற்று வரையான 15 நாள்களில் 6 ஆயிரத்து 283 பேருக்குக் கொரோனாத் தொற்று ஏற்பட்டுள்ளது. இந்தக் காலப் பகு 18 ▶

மாமனாரை கோடரியால் கொன்ற

### கொலையாளிக்கு தூக்குத் தண்டனை

வவுனியா, நவ. 7
வீட்டில் உறங்கிக்கொண்டிருந்த மாமனாரை நள்ளிரவில் கோடரியால் தாக்கிக் கொலை செய்த மருமகனுக்கு தூக்குத் தண்டனைத் தீர்ப்பு வழங்கியது 18 ▶

### இன்று 12 மணியிலிருந்து 10 நிமிடங்களுக்கு கோவில் மணிகளை ஒலிக்கவிடுங்கள்

*நல்லை ஆதீனம், இந்துமாமன்றம் கூட்டாகக் கோரிக்கை*



யாழ்ப்பாணம், நவ.7
இந்துக் கோவில்களில் இன்று சனிக்கிழமை தொடக்கம் 10 நாள்களுக்கு மதியம் 12 மணியிலிருந்து தொடர்ச்சியாக 10 நிமிடங்கள்வரை 19 ▶

# பாடசாலைகள் ஆரம்பிக்கும்வரை வீட்டிலிருந்து கற்றலைத் தொடரவும்

## தொலைக்காட்சி, செயலி ஊடாகவும் கற்கலாம் என்று வடக்கு கல்விப் பணிப்பாளர் மாணவர்களுக்கு அறிவுறுத்து

யாழ்ப்பாணம், நவ. 7

**தற்போதைய கொவிட் 19 சூழ்நிலை காரணமாக பாடசாலைகளை மீள ஆரம்பிக்கும் திகதி 23ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. எனவே இந்த இரு வாரங்கள் காலத்தை மாணவர்கள் வீட்டில் இருந்தவாறு தங்களது பாடங்களைக் கற்பதற்குரிய காலமாக பயன்படுத்துமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர் என்று வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார் அறிவுறுத்தியுள்ளார்.**

க.பொ.த (சா.த) பரீட்சை ஜனவரி 18 தொடக்கம் நடத்துவதற்கு பரீட்சைத் திணைக்களத்தால் திட்டமிடப்பட்டுள்ளது. அதேபோன்று நடத்தப்படாத இரண்டாம் தவணைப் பரீட்சைக்குரிய பரீட்சைகள் பாடசாலை மீள ஆரம்பிக்கும் முதல் வாரத்தில் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

தரம் 10-11 மாணவர்களுக்கான சுய கற்றல் கையேடுகள் மாகாணக்கல்வித் திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்டு மாணவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. ஏனைய தரத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கான கையேடுகள் வலயக் கல்வி அலுவலகங்களினால் தயாரிக்கப்பட்டு மாணவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. மாகாணக் கல்வித் திணைக்களத்தின் கற்றல் வள தயாரிப்பு அலகினால் தரம் 10,11 மாணவர்களுக்கான பிரதான பாடங்களுக்கான காணொலிகள் தயாரிக்கப்பட்டு 'யூரியூப்' இல் பதிவேற்றப்பட்டுள்ளன. வலயக் கல்வி அலுவலகங்களுக்கும் விநியோகிக்கப்பட்டுள்ளன.

பெற்றோர்கள் தமக்குத் தேவையான பிரதிகளை வலய கணினி வள நிலையங்களிலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

மாகாணக்கல்வித் திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்ட கற்றலுக்கான காணொலிகளையும், கற்றல் சாதனங்களையும் www.edudept.np.gov.lk எனும் முகவரியில் Learning Materials , Model Papers ஆகிய தலைப்புகளின் கீழ் பார்வையிடலாம். அத்துடன் www.youtube.com/c/lmdmunit , www.youtube.com/c/channelnie ஆகிய youtube அலைவரிசைகளிலும் பார்வையிடலாம். அத்துடன் google play store இலிருந்து தரவிறக்கக்கூடிய EMIS NP எனும் தொலைபேசி செயலி ஊடாகவும் கற்றல் வளங்களை பெற்றுக் கொள்ள முடிவதுடன் மாணவர்கள் தமது சந்தேகங்களை ஆசிரியர்களிடம் வினவ முடியும்.

மத்திய கல்வி அமைச்சினால் குருகுலம் கல்வி தொலைக்காட்சி ஒளிபரப்புக்கள் நேத்ரா தொலைக்காட்சி ஊடாக ஒளிபரப்பப்படுகின்றன. இந்த ஒளிபரப்புக்களை மாணவர்கள் பார்வையிட்டு வீட்டில் இருந்தவாறு கற்றலில் ஈடுபடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

இந்தநிகழ்ச்சியின்நேர அட்டவணையை www.facebook.com/nppde எனும் மாகாணக் கல்வித்திணைக்களத்தின் முகப்புத்தகப் பக்கத்தின் ஊடாகவும் நாளாந்த பத்திரிகைகள் மூலமாகவும் அறிந்துகொள்ள முடியும். கல்விக்கான பொன்னான நேரத்தை உரிய வகையில்பயன்படுத்த மாணவர்களை வழிப்படுத்துமாறு அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்களைக் கேட்டுக் கொள்கின்றோம் - என்று பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (கு)

# பாடசாலைப் பெயரில் நன்கொடை வசூல்

## ஏமாறவேண்டாம் என்று அறிவுறுத்து

யாழ்ப்பாணம், நவ. 7

கைதடி நவீல்ட் பாடசாலையின் பெயரைக் கூறி தனிநபர்கள் பலர் நன்கொடைகள் வசூலிக்கின்றனர என்று முறைப்பாடுகள் கிடைக்கின்றன. அத்தகைய எவ்விதமான நன்கொடைகளையும் கோரவில்லை என்று நவீல்ட் பாடசாலை நிர்வாகம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் பாடசாலை அதிபர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் குறிப்பிட்டுள்ளதாவது,

நவீல்ட் பாடசாலையின் நன்கொடைகள் யாவும் திங்கள் முதல் வெள்ளி வரையான வார நாள்களில் காலை 8.30 மணி தொடக்கம் மாலை 4.30 மணிவரை பாடசாலை அலுவலகத்திலேயே பெற்றுக் கொள்ளப்படுகின்றன. தவிர்ந்த வெளிநபர்களால் நவீல்ட் பாடசாலையின் பெயரில் கோரப்படும் எந்தவொரு நன்கொடைக்கும் பாடசாலைக்கும் எந்தத்தொடர்பும் இல்லை. வெளியே நன்கொடை கோருபவர்களுக்கு வழங்காதீர்கள் என்று பொதுமக்களைக் கேட்டுக்கொள்கின்றோம் என்றுள்ளது. (கு-ரி4)



# அமரர் டீ.ஏ.ராஜபக்சவின் 53ஆவது நினைவு தினம்

கொழும்பு, நவ.7

அமரர் டீ.ஏ.ராஜபக்சவின் 53ஆவது நினைவு தின நிகழ்வு, பிரதமர் மஹிந்த ராஜபக்ச தலைமையில் நேற்று தங்கல்லையில் உள்ள டீ.ஏ.ராஜபக்சவின் உருவச்சிலைக்கு அருகில் இடம்பெற்றது.

இதில் பிரதமர், பிரதமரின் பாரியார் திருமதி. ஷிரந்தி ராஜபக்ச,அமைச்சர்களான சமல் ராஜபக்ச, நாமல் ராஜபக்ச உள்ளிட்ட குடும்ப உறுப்பினர்கள் கலந்துகொண்டனர். கொவிட் -19 தொற்று நிலைமைக்கு மத்தியில் முறையான சுகாதார வழிகாட்டல்களுடன், வரையறுக்கப்பட்ட எண்ணிக்கையிலான பங்கேற்பாளர்களுடன் நிகழ்வு இடம்பெற்றது. (ப)

# இரண்டு வாரங்களுக்காவது முடக்கல் நிலைமை அவசியம்

## தேசிய விடுதலை மக்கள் முண்ணனி வலியுறுத்து

கொழும்பு, நவ 7

"இலங்கையில் அதி தீவிரமாகப் பரவி வரும் கொரோனா வைரஸ் தொற்றைக் கட்டுப்படுத்த நாடு பூராகவும் சுமார் இரண்டு வாரங்களுக்காவது முடக்கல் நிலையை ஏற்படுத்தி தொற்றாளர்களை அடையாளம் காண அரசும் சம்பந்தப்பட்ட அமைச்சு பொறுப்புடையவர்களும் அவசர நடவடிக்கை எடுக்க வேண்டும்."

இவ்வாறு தேசிய விடுதலை மக்கள் முண்ணனி கட்சியின் தலைவர் முஸம்மில் மொஹிதீன் நேற்று விடுத்துள்ள ஊடக அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

அதில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

"நாட்டு மக்கள் உயிரோடு வாழ்ந்தால் மட்டுமே ஒவ்வொரு குடும்பமும் சந்தோசமாக உழைத்து வாழ முடியும். அத்துடன் நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப முடியும். இதுவரை நாட்டில் பல பாகங்கள் முடக்கப்பட்ட நிலையில் கூட தொற்றுப் பரவலைக் குறைக்க முடியவில்லை. மாறாக தொற்றுப் பரவல் அதிகரித்தே காணப்படுகின்றது.

அரசு நாட்டை முடக்கி மக்களைக் காப்பாற்ற முயற்சிகள் எடுக்கும் விடயத்தில் கவனம் காட்டுவதில் மந்த நிலையைக் கடைப்பிடிப்பதைக் காணமுடிகின்றது.

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச வெளியிட்ட அறிக்கையில் நாட்டை ஒருபோதும் முடக்க இடமளிக்க மாட்டேன் எனக் கூறியமை மிகவும் சிந்திக்க வேண்டிய விடயமே!

நாட்டின் ஒரு சில பாகங்களை முடக்கம் செய்து பரவலைக் குறைப்பதே கஷ்டமாகவுள்ள நிலையில், முழுமையாக முடக்கத்தை நீக்கி எப்படி இதைக் கட்டுப்படுத்துவது?

மக்களின் வாழ்வாதார நிவாரணங்களை வழங்கி நடவடிக்கை எடுக்க வேண்டும். அரசு மாறாக நிதியை முடக்கி சமூக முடக்கத்தைத் திறப்பது என்பது கவலைக்குரிய விடயமே!

நாளுக்கு நாள் அதிகரித்து வரும் தொற்றாளர்கள் பலத்த சிரமத்தை அனுபவித்து வருகின்றனர். அத்துடன் இறப்பும் அதிகரித்தே வருகின்றது. இவைகளை அறிந்த தொற்றாளர்கள் தனிமைப்படுத்தும் நிலையங்களுக்குச் செல்வதற்கு மிகவும் தயங்குகின்றனர்.

அரசு இன்றைய நாளைய பொருளாதாரத்தைக் கவலையாகக் கொண்டால் எதிர்காலம் முற்றாகப் பாதிக்கப்படும் என்பதில் சந்தேகம் இல்லை.

அத்துடன் இப்படி நாளுக்கு நாள் தொற்று அதிகரிப்பு காரணமாக பாடசாலைகள் தொடர்ச்சியாக மூட வேண்டிய நிலையும் ஏற்படும். நாட்டின் கல்வி வளர்ச்சியிலும் பாரிய வீழ்ச்சி ஏற்படும் சூழ்நிலை தோன்றும். இவைகளில் அரசு அதி விசேட கவனம் செலுத்த வேண்டும் எனக் கேட்டுக் கொள்கின்றேன்"-என்றுள்ளது. (கு-22)

# பருத்தித்துறையில் 14 தாதியர்கள் தனிமையில்

பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் 14 தாதியர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

மேல் மாகாணத்தைச் சேர்ந்த அந்தத் தாதியர்கள் விடுமுறையில் சென்று திரும்பியமையால் அவர்கள் மருத்துவமனையில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (கு-இ)

# தேன் என்று கூறி சீனிப் பாணி விற்பனை!

## 49 போத்தல்கள் மல்லாவியில் மீட்பு

மல்லாவி, நவ. 7

தேன் என்று கூறி மல்லாவியில் விற்பனை செய்யப்பட்டு வந்த சீனிப்பாணிப் போத்தல்களை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் நேற்றுக் கைப்பற்றினார்.

கொரோனா வைரஸை தடுக்கும் நோய் எதிர்ப்பு சக்தியாக மிளகுடன் தேன் பயன்படுத்தப்படுகின்றது என்று கூறப்படும் நிலையில், அவற்றை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் நேற்றுக் கைப்பற்றினார். அவற்றை விற்பனை செய்தனர் என்ற குற்றச்சாட்டில் கையும்மெய்யுமாக வவுனியாவைச் சேர்ந்த பலர் மாட்டிக் கொண்டனர் என்று பொதுச் சுகாதாரப் பரிசோதகர் தெரிவித்தார்.

மல்லாவி சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனைக்கு உட்பட்ட மல்லாவி நகரில் சம்பவம் இடம்பெற்றது.

பொதுமக்கள் வழங்கிய தகவலின்படி, அங்கு சென்று அனைவரின் தேன் போத்தல்களையும் சுகாதார மருத்துவ அதிகாரி பணியகத்தில் பரிசோதனைக்கு உட்படுத்தியபோதே அவை தேன் அல்ல சீனிப் பாணி என்பதும் தெரியவந்தது. அவர்களிடமிருந்து சீனிப்பாணியுடைய 49 போத்தல்கள் கைப்பற்றப்பட்டன.

அவர்கள் தம்மீதாக குற்றத்தை ஏற்றுக்கொண்டுள்ளனர். மக்களை ஏமாற்றி போலித் தேன் விற்பனை செய்தனர் என்று அவர்கள் மீது வழக்குப் பதிவுசெய்யவுள்ளோம் என்று பொதுச் சுகாதாரப் பரிசோதகர் மேலும் தெரிவித்தார். (கு-9)

## சிறைகளில் இணையத் தொடர்பாடல்

கொழும்பு, நவ.7
சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளுடன் இணையம் மூல மான தொடர்பாடலை ஏற்படுத்திக் கொடுக்கும் நடவடிக்கையில் சர்வ தேச செஞ்சிலுவைச் சங்கம் இறங்கியுள்ளது.

இந்தத் திட்டம் எதிர் வரும் வாரங்களில் நடைமுறைப்படுத்தப்படும் என்று தெரிவிக்கப்படுகின்றது. நிர்வாகக் கட்டுப்பாடுகளுக்கு மத்தியில், கைதிகள் தமது உறவுகளுடன் தொலைபேசி ஊடாகக் கலந்துரையா டுவதற்கு இது உதவும் என்று சர்வதேச செஞ்சிலுவைச் சங்க அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். இதனால் 23 சிறைச்சாலைகளில் உள்ள 33 ஆயிரம் பேர் நன்மை பெறுவார்கள் என்று சர்வதேச செஞ்சி லுவை சங்கம் குறிப்பிட்டுள்ளது. (ஏ-இ)

# 20 நிமிடங்களில் முடிவு

புதிய கருவி இறக்குமதி

கொழும்பு. நவ.7
கொரோனாத் தொற்று ஏற்பட்டுள்ளதா என் பதை 20 நிமிடங்களில் கண்டறியக்கூடிய கருவிகள் கொண்டு வரப்படவுள்ளன என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதன்மூலம் விரைவாகத் தொற்றாளர்களை இனங்கண்டுகொள்ள முடியும் என்று சுகாதார அமைச்சின் இரசாயனகூட சேவைப் பிரிவின் பிரதிப் பணிப்பாளர் மருத்துவர் சமன் ரத்னா யக்க தெரிவித்துள்ளார்.

உலக சுகாதார அமைப்பால் அனுமதிக்கப்பட் டுள்ள இரண்டு லட்சம் வைரஸ் பரிசோதனைக் கட்டமைப்புக்கள் கொரியாவில் இருந்து தரு விக்கப்படவுள்ளன என்றும் அவர் தெரிவித் துள்ளார்.

20 நிமிடங்களில் தொற்றைக் கண்டறியக் கூடிய 8 லட்சம் கருவிகளை அடுத்த வாரம் நாட்டுக்குக் கொண்டுவர அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது. இந்தக் கருவிகள் மூலம் முத லீட்டுச் சபையிலும், ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் தொழிற்சாலைகளிலும் பணிபுரியும் சுமார் 8 லட்சம் ஊழியர்கள் பரிசோதிக்கப்பட வுள்ளனர் என்றும் அவர் தெரிவித்தார். (ஏஇ)



## வெலிக்கடை சிறையில் 23 பேருக்கு கொரோனா

கொழும்பு, நவ. 7
வெலிக்கடைச் சிறைச் சாலையில் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக் கப்பட்டவர்களின் தொகை வேகமாக அதிகரித்து வரு கின்றது. நேற்று மட்டும் 23 பேர் தொற்றுடன் அடை யாளம் காணப்பட்டுள்ள னர். 22 பெண் கைதிக ளுக்கும், ஓர் ஆண் கைதிக் கும் நேற்று தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அவர்கள் பலத்த பாதுகாப் புடன் வெலிக்கந்தை ஆதார மருத்துவமனை யில் சிகிச்சைக்காகச் சேர்க் கப்பட்டுள்ளனர். வெலிக்க டைச் சிறைச்சாலையில் நேற்றுமுன்தினமும் 7 பேர் கொரோனாத் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டி ருந்தனர். ஒரு சிறைச் சாலை அதிகாரிக்கும், 4 பெண் கைதிகளுக்கும், 2 ஆண் கைதிகளுக்கும் தொற்று உறுதி செய்யப்பட் டிருந்தது. அதற்கமைய வெலிக்கடை சிறைச்சாலை யில் இதுவரை 30 பேர் கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர். (த-22)



# விஜியேந்திரன் கொலை நீதிகோரி ஆர்ப்பாட்டம்

**மன்னார், நவ.7**
**மாந்தை மேற்கு பிரதேச செயலகத்தின் கிராம அலுவல கர்களுக்கான பதில் நிர்வாக உத்தியோகத்தராகக் கடமை யாற்றிய இலுப்பை கடவை கிராம அலுவலரான எஸ். விஜியேந்திரன் (வயது55) கொலை செய்யப்பட்டமை யைக் கண்டித்தும், குற்றவாளிகளைக் கண்டுபிடிக்கக் கோரியும் நேற்றுக் காலை கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தப்பட்டது.**

மாந்தை மேற்கு பிரதேச செயலக பணியாளர்கள் இணைந்து இந்தப் போராட்டத்தை முன்னெடுத்தனர். பிரதேச செயலகத்துக்கு முன்பாக காலை 9.30 மணி முதல் 10.30 மணிவரை கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தப்பட்டது.

அதில் மாந்தை மேற்கு பிரதேச செய லாளர் எஸ்.கேதீஸ்வரன், உதவி பிர தேச செயலாளர், மாந்தை மேற்கு பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், மாந்தை மேற்கில் கடமையாற்றும் கிராம அலுவலகர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். "அரச சேவைக்கு சன்மானம் ஆறடி கிடங்கா?, கொலை யாளி யார்? விசாரணையைத் துரிதப் படுத் துங்கள், அரச உத்தியோகத்த ரின் பாதுகாப்பை உறுதிப்படுத்துங் கள், கிராம அலுவகர் விஜியேந்திர னின் கொலைக்கு நீதி வேண்டும்" என்பன போன்ற வாசகங்கள் எழுதப் பட்ட பதாகைகளைத் தாங்கியவாறு அவர்கள் கவனவீர்ப்பில் ஈடுபட்ட னர்.

மாந்தை மேற்கு பிரதேச செயலகத் தின் கிராம அலுவலகர்களுக்கான பதில் நிர்வாக உத்தியோகத்தராக கட மையாற்றிய இலுப்பைக்கடவை கிராம அலுவலரான எஸ்.விஜியேந்தி ரன் (வயது55) கடந்த 3ஆம் திகதி இனந்தெரியாதவர்களால் தாக்கப்பட் டுக் கொலைசெய்யப்பட்டுள்ளார்.

தனது கடமை முடிந்து இரவு 8 மணி யளவில் வீடு திரும்பிக் கொண்டி ருந்தபோதே கள்ளியடி ஆத்தி மோட்டை பகுதியில் வைத்து விஜி யேந்திரன் தாக்குதலுக்கு இலக்காகி யுள்ளார். (எ-56)

## சிறுமியுடன் தவறாக நடந்த ஆசிரியர் கைது

முல்லைத்தீவு, நவ.7
சிறுமி ஒருவரை துஷ்பி ரயோகம் செய்ய முயற் சித்தார் என்ற குற்ற சாட்டில் வெலிஓயாவில் ஆசிரியர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.



கடந்த புதன்கிழமை தனியார் வகுப்புக்குச் சென்ற 11 வய துச் சிறுமியின் கையைப் பிடித்து தவ றாக நடக்க முயற்சித்தார் என்று ஆசிரியர் மீது குற்றஞ்சாட்டப் பட்டுள்ளது.

இது தொடர்பில் சிறுமியின் பெற்றோர் வெலிஓயா பொலிஸாரிடம் முறைப்பாடு செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட ஆசிரியர் 37 வயதுடையவர் என்றும், அவர் ஹெப்பிட்டிக்கொலவ நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு எதிர்வரும் 11ஆம் திகதிவரை விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். சம்பவத்துடன் தொடர்புபட்ட சிறுமி மருத்துவ பரிசோதனைக்காக மருத்துவனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (எ-19)




## கொரோனாவை விரட்ட பள்ளிவாசலில் வழிபாடு

மன்னார்,நவ.7
நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனாத் தொற் றால் பாதிக்கப்பட்டுள்ள அனைவரும் நலம் பெறவேண்டி மன்னார் நகர ஜீம்மா பள்ளி வாசலில் நேற்றுமுன்தினம் விசேட வழிபாடு நடைபெற்றது.

முஸ்லிம் பண்பாட்டுவல்கள் திணைக்களத் தின் கோரிக்கைக்கு அமைவாக அகில இலங்கை ஜம்மியத்துல் உலாமா சபையின் மன்னார் மாவட்ட கிளையின் ஏற்பாட்டில் இந்த வழிபாடு முன்னெடுக்கப் பட்டது.

இதன்போது மூர்வீதி ஜீம்மாப்பள்ளி மௌலவி எம்.அசீம் உள்ளிட்ட மௌலவி கள்மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ஐ-56)



## வார இறுதி நாள்களில் அதிக பொலிஸ் தடை!

கொழும்பு, நவ.7
வார இறுதி நாள்களில் அதிகளவான பொலிஸ் வீதித் தடைகள் ஏற் படுத்தப்படும் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர், பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது:

வார இறுதியில் பயணங்களை மக்கள் கட்டுப்படுத்திக்கொள்ள வேண் டும். வார இறுதியில் கூட்டங்கள், விளையாட்டு நிகழ்வுகள் என்பன முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளன. தனிமைப்படுத்தல் ஊரடங்கு இல் லாத பகுதிகளுக்கும் இது பொருந்தும். பொது மக்கள் தமது நேரத்தை வீடுகளிலேயே கழிக்க வேண்டும். கொவிட் தொற்றை தடுப்பதற்கான வேலைத் திட்டத் துக்கு ஒத்துழைப்புத் தர வேண்டும். என்றார். (ஏ-இ)

# 'சீன எதிர்ப்பு' பொறிக்குள் இலங்கையை மாட்டச் சதி

### விழிப்பாக இருக்குமாறு அரசுக்கு தேசியவாத அமைப்புகள் எச்சரிக்கை

**கொழும்பு, நவ.7**

**சீனாவுக்கு எதிராக இலங்கையை திசைதிருப்பும் கூட்டு முயற்சியில் அமெரிக்காவும், இந்தியாவும் ஈடுபட்டுள்ளன. ஜோ பைடன் ஆட்சிக் காலத்திலும் இது தொடரும். ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தலைமையிலான அரசு விழிப்பாக இருக்கவேண்டும். இவ்வாறு சிங்கள தேசியவாத அமைப்பு களின் கூட்டணியான 'தேசிய ஒருங்கமைப்பு ஒன்றியம்' எச்சரித்துள்ளது.**

அந்த ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் கலாநிதி குணதாச அமரசேகர இது தொடர்பில் தெரிவித்துள்ளதாவது:
அமெரிக்காவில் ஆட்சிகள் மாறினாலும் இலங்கைமீதான அழுத்தங்கள் குறையப்போவதில்லை. அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் எப்படியான மாற்றங்கள் நடந்தாலும் அந்த நாட்டின் வெளிவிவகாரக் கொள்கை என்பது முழுமையாக மாற்றமடையாது.
முக்கியமாக தெற்காசிய நாடுகள் மீதான அமெரிக்காவின் கழுகுப் பார்வை தொடரும். சீனாவின் ஆதிக்கத்தை கட்டுப்படுத்துவதற்கான திட்டங்களும் முன்னெடுக்கப்படும்.
சீனாவுடனான உறவுகளை மட்டுப்படுத்துவதற்காக இலங்கைக்கு இராஜதந்திர மட்டத்தில் அமெரிக்கா அழுத்தங்களை பிரயோசிக்கும். தற்போது அமெரிக்காவுடன் இந்தியாவும் இணைந்துள்ளது.
அந்த நாட்டுக்கு பல உதவிகளை அமெரிக்கா வழங்கியுள் ளது. இரு நாடுகளும் சீன எதிர்ப்புப் போக்கைக் கடைபிடிப்பவை. எனவே, இலங்கைமீது கூட்டு அழுத்தம் பிரயோகிக்கப்படலாம். இது தொடர்பில் எமது அரசாங்கம் விழிப்பாகச் செயற்படவேண்டும். இராஜதந்திர மட்டத்திலான கொடுக்கல் வாங்கல்களின்போது விழிப்பாக இருக்கவேண்டும். சீனாவுடனான உறவை பலப்படுத்தவேண்டும்.
அதேவேளை, இலங்கை அமெரிக்கா பக்கம் சாய்வதாலேயே அன்று 13 ஆவது திருத்தச் சட்டத்தை இந்தியா திணித்தது.
ஆனால் இன்று இந்தியாவே அமெரிக்கா பக்கம் சாய்ந்துள்ளது. இதனால் 13 தொடர்பில் இந்தி யாவால் பிரயோகிக்கப்படும் அழுத்தங்களை அரசாங்கம் கண்டுகொள்ளதேவையில்லை. என்றார். (எ-44)

பல்கலை மாணவர்களுக்கு

# 'லப்ரொப்'

### அரசு திட்டம்



கொழும்பு, நவ.7
இம்முறை பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவாகியுள்ள 41ஆயிரம் மாணவர்களுக்கு கடன் அடிப்படையில் மடிக்கணனிகளை வழங்குவதற்கு பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.
அதிகபட்சமாக ஒரு லட்சம் ரூபா வரையில் கடன் வழங்கப்பட உள்ளது. இதனூடாக மடிக்கணனியைக் கொள்வனவு செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
மாணவர்கள் பட்டம் பெற்றுக்கொள்ளும் வரையில் மடிக்கணனிக்கான கடன் தொகையைச் செலுத்தத் தேவையில்லை எனவும் கற்கும் காலத்தில் மாதாந்த வட்டித் தொகையை மட்டுமே செலுத்த நேரிடும் எனவும் தெரிவிக்கப்படு கின்றது.
மாணவர்கள் தங்களுக்கு விருப்பமான ஓர் நிறுவனத்தில் மடிக் கணனிகளைக் கொள்வனவு செய்ய முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ப)

## கூட்டுக் கடற்பயிற்சியாலேயே கரையொதுங்கின திமிங்கலங்கள்

கொழும்பு, நவ. 7
இந்தியப் பெருங்கடலில் பல நாடுகள் நடத்திய கூட்டு கடற்படைப் பயிற்சியின் காரணமாகவே திமிங்கலங்கள் கரையொதுங்கின என தெரியவந்துள்ளது.
பாணந்துறை கடற்கரையில் நூற்றுக்கணக்கான திமிங்கலங்கள் கடந்த 2ஆம் திகதி கரையொதுங்கியமை பெரும் கேள்விகளை எழுப்பியிருந்தது. இதற்கான காரணத்தை சுற்றுச்சூழல் வல்லுநர்கள் கண்டுபிடித்துள்ளனர்.
இந்தியா, ஆஸ்திரேலியா, ஜப்பான், அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் நடத்திய 'மலபார்' என்ற கடற்படை பயிற்சியால் திமிங்கலங்கள் சிக்கித் தவித்தன எனவும் இதன் காரணமாகவே அவை கரையொதுங்கின எனவும் சுற்றுச்சூழல் ஆர்வலர் நயனக ரன்வெல்ல தெரிவித்தார். (ஒ.இ)

## சட்டத்தரணி ஹிஜாஸை விடுவிக்க சர்வதேச அழுத்தம்

கொழும்பு, நவ. 7
மனித உரிமைகள் சட்டத்தரணி ஹிஜாஸ் ஹிஸ்புல்லாவை உடனடியாக விடுதலை செய்வதன் ஊடாக சட்டத்தின் ஆட்சியையும் சர்வதேச சட்ட வரையறைகளுக்குக் கட்டுப்படுவதையும் உறுதி செய்ய வேண்டும். அதேவேளை, இலங்கையிலுள்ள சட்டத்தரணிகள் எவ்வித அச்சுறுத்தலுமின்றி தமது தொழிலை முன்னெடுப்பதற்கான சுதந்திரத்தை உறுதிப்படுத்த வேண்டும் என்று இங்கிலாந்து மற்றும் வேல்ஸிற்கான மனித உரிமைகள் சட்டத்தரணிகள் குழு வலியுறுத்தியிருக்கிறது.
இது தொடர்பில் அந்த அமைப்பு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:
ஹிஜாஸ் ஹிஸ்புல்லா ஏப்ரல் மாதம் 14 ஆம் திகதி பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டு, ஜனாதிபதியினால் வழங்கப்பட்ட தடுப்பு உத்தரவின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருப்பதுடன் அவரைக் கைதுசெய்தமைக்கான காரணங்கள் எவையும் அவரது குடும்பத்தினருக்குத் தெளிவுபடுத்தப்படவில்லை.
சுமார் 6 மாதங்களுக்கும் அதிகமான காலம் எவ்வித விசாரணைகளுமின்றி, நீதிமன்றத்தில் முற்படுத்தப்படாமல் முறையான சட்ட உதவிகளைப் பெறுவதற்கும் அனுமதிக்கப்படாமல் தடுத்து வைக்கப்பட்டிருக்கிறார்.
அவரைத் தடுத்துவைப்பதற்கான உத்தரவு ஒக்ரோபர் 14 ஆம் திகதி மீளப்புதுப்பிக்கப்பட்டதுடன் கடந்த மாதம் 28 ஆம் திகதி நீதவான் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவிருந்த அவரது வழக்கு, கொரோனா வைரஸ் பரவல் காரணமாக எதிர்வரும் 2021 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதத்துக்குப் பிற்போடப்பட்டி ருக்கிறது.
அத்துடன் தடுத்துவைக்கப்பட்டிருக்கும் ஹிஜாஸ் ஹிஸ்புல்லாவை உடன டியாக விடுதலை செய்யவேண்டும் என்று இலங்கை அரசை வலியுறுத்துகின்றோம், என்றுள்ளது. (ஒ.இ)

## கொரோனா கொத்தணி; விசாரணையில் சிக்கல்

### கைவிரித்தது பொலிஸ்

கொழும்பு, நவ.7
பெரண்டிக்ஸ் கொவிட் கொத் தணி தொடர்பில் விசாரணை செய்வது குறித்து தற்போது சிக்கலான நிலை ஏற்பட்டுள்ளது எனறு பொலிஸ் ஊடகப் பேச்சாளர், பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.
கொழும்புக் குற்றவியல் பிரிவின் சுமார் 40 அதிகாரிகளுக்கு கொவிட் 19 தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ள காரணத்தாலே இந்தச் சிக்கில் நிலை ஏற்பட்டுள்ளது என்றும், இந்த விசாரணைகளின் போது மினுவங்கொட தொழிற்சாலை ஊழியர்களிடம் வாக்குமூலம் பெற வேண்டியுள்ளதால் இந்தப் பிரச்சினை ஏற்பட்டுள்ளது என்றும் அவர் சுட்டிக் காட்டினார். (ப-இ)

## இடம்பெயர்ந்தவர்களுக்கான கொடுப்பனவு வழங்குவதில் தொடர்ச்சியாக பல தடைகள்

### மஸ்தான் எம்.பி தெரிவிப்பு

வவுனியா, நவ. 7
கொரோனா பெருந்தொற்றுக் காரணமாக வாழ்வாதாரத்தை இழந்த பல குடும்பங்களுக்கு பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் கொடுப்பனவுகளை வழங்கியுள்ளோம் என்று தெரிவித்தார் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் மன்னார் மற்றும் முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான காதர் மஸ்தான்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது,
இடர்கொடுப்பனவை நான் வழங்க எத்தனித்த ஒவ்வொரு தடவையும் பல்வேறு சிக்கல்களையும் தடைகளையும் எதிர்நோக்க வேண்டி ஏற்பட்டது. இந்தக் கொடுப்பனவை வழங்கிவிடக்கூடாது இதனைத் தடுத்து நிறுத்திவிட வேண்டும் என்பதற்காக பல தடைகளைப் போட்டு தாமதமாக்கியவர்கள் எம்மீது விமர்சனங்களையும் அள்ளி வீசினர்.
இருப்பினும் எனது மக்கள் சேவையை இவர்களால் ஒரு போதும் தடுத்து நிறுத்தி விட முடியாது - என்றார். (ம-இ)



## 34 இலங்கையர்கள் நாடு திரும்பினார்கள்

கொழும்பு, நவ. 7
கொரோனாத் தொற்றுக் காரணமாக வெளிநாடுகளில் சிக்கியிருந்த இலங்கை பிரஜைகள் 34 பேர் நாட்டை வந்தடைந்தனர்.
கட்டார், ஆஸ்திரேலியா, ஜப்பான் ஆகிய நாடுகளிலிருந்து இவர்கள் நாட்டுக்குள் அழைத்து வரப்பட்டுள்ளனர் என்று கொரோனாத் தொற்றை தடுக்கும் தேசிய செயலணி தெரிவித்துள்ளது.
நாட்டுக்கு அழைத்துவரப்பட்டுள்ள அனைவரையும் தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ம-இ)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# சமூகத்தைத் திருத்த முன் உங்களைத் திருத்துங்கள்!

அரச உத்தரவொன்றை, இறுக்கமான சுகாதாரப் பொறிமுறையொன்றை அதை முன்மாதிரியாக நின்று செயற்படுத்த வேண்டியவர்களே புறந்தள்ளுவார்களாக இருந்தால், சாதாரண பொதுமக்கள் எவ்வளவு கரிசனையோடு மேற்படி உத்தரவுகளை செயற்படுத்துவார்கள்?. யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தை நோக்கி இவ்வாறு கேள்வி எழுப்பவேண்டிய நிலை எழுந்துள்ளது.

யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் நேற்று கிராமிய மேம்பாட்டுக் கூட்டம் இடம்பெற்றுள்ளது. சுகாதார அறிவுறுத்தல்களை மீறிய வகையில் அந்தக் கூட்டம் நடத்தப்பட்டுள்ளது என்று குற்றஞ்சாட்டப்படுகின்றது. மாவட்டங்களைவிட்டு பிறமாவட்டங்களுக்குச் செல்பவர்கள் 14 நாள்கள் தனிமைப்படுத்தப்பட வேண்டும் என்பது அரச உத்தரவு. கொரோனா மூன்றாவது அலையில் இந்த உத்தரவு பல மாவட்டங்களிலும் இறுக்கமாகக் கடைப்பிடிக்கப்படுகின்றது. ஆனால் நேற்று சுமார் 200 பேர் எந்தத் தனிமைப்படுத்தலும் சுகாதாரப் பொறிமுறையும் இல்லாமல் கலந்துகொண்டிருந்தனர். தனிமைப்படுத்தல் சட்ட நடைமுறைகளுக்கு அமைய இந்தக் கூட்டத்தை நடத்த முடியாது என்று பொதுச் சுகாதார மருத்துவ அதிகாரி மாவட்டச் செயலருக்கு எழுத்து மூலம் அறிவுறுத்தியபோதும், அதை மீறியே இந்தக் கூட்டம் நடத்தப்பட்டுள்ளது என்பது கூடுதல் தகவல்.

கொரோனா மூன்றாவது அலை நாட்டையே புரட்டிப்போட்டுள்ளது. தென்பகுதியில் இந்தத் தொற்று பெரிதும் தலையெடுத்துள்ளது. நாள்தோறும் பலநூறு பேர் புதிய தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டு வருகின்றனர். இவ்வாறான பெரும் ஆபத்தான நிலையில் அதே தென்பகுதியில் இருந்து மேற்படி அதிகாரிகள் வந்து சென்றுள்ளனர். அதை மாவட்டச் செயலகமும் அனுமதித்துள்ளது.

இலங்கையைப் பொறுத்தவரை கொரோனா வைரஸானது பெருந்தொற்றாக உருவெடுத்துள்ளது என்பது அனைவரும் அறிந்ததே. தெற்கில் அதன் வலைப்பின்னல் மிகப் பலமானது. ஒவ்வொரு கொத்தணிகளில் இருந்தும் புதியபுதிய சிறு கொத்தணிகள் உருவாகிக்கொண்டுதான் உள்ளன. நாடெங்கிலும் இவ்வாறு சிறு கொத்தணிகள் இருக்கலாம் என்றும் கூட அண்மையில் எச்சரிக்கப்பட்டது. இவ்வாறிருக்கையில் வந்து சென்றவர்களில் அனைவரும் எந்த வலைப்பின்னலோடும் தொடர்பற்றவர்கள் என்று சொல்லிவிட முடியாது. இப்படியிருக்கையில் எந்த அடிப்படையில் மாவட்டச் செயலகம் இந்தக் கூட்டத்தை அனுமதித்தது என்பதை மக்களிடத்தில் தெளிவுபடுத்த வேண்டும்.

இறுக்கமான பாதுகாப்புப் பொறிமுறைக்குள் இருக்கும் அமைச்சர்களும் அரசதிகாரிகளும்தானே வந்து சென்றார்கள். அவர்கள் கொரோனா காவிகளாக இருந்துவிட வாய்ப்பில்லை என்று என்று கூறிவிட முடியாது. ஏனெனில், எமது நாட்டின் அதிகாரப் பீடங்களைக் காட்டிலும் பலமடங்கு மேம்பட்ட சுகாதாரப் பொறிமுறையுடன் இயங்கிக்கொண்டிருந்த உலகத் தலைவர்கள் பலரும் இந்த வைரஸால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கொரோனா வைரஸைக் கட்டுப்படுத்துவதும் அது கட்டுக்குள் அடங்காமல் செல்வதும் பொதுமக்களின் கைகளிலேயே உள்ளது என்று அடிக்கடி ஊடகங்களின் முன்னால்தோன்றி கருத்துத் தெரிவிக்கும் யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தின் அதிகாரத் தரப்புக்கள் பொதுமக்களுக்கு ஏற்ற முன்மாதிரித் தனத்தை தமது நடத்தையில் காட்டவேண்டும். பொதுமக்களே அவதானம் என்று கூறிக்கொண்டு மறுபக்கத்தில் கொரோனாக் காவிகளாகச் செயற்பட்டுக் கொண்டிருப்பது மிகப்பெரும் செயல்நிலை முரண்.

# 'வீட்டிலிருந்து' தீபாவளியை இம்முறை கொண்டாடுங்கள்

## அழைப்பு விடுக்கிறார் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன்



**கொழும்பு, நவ. 7**

**நாட்டில் வேகமாகப் பரவி வரும் கொரோனாத் தொற்றிலிருந்து பாதுகாத்துக்கொள்ள இந்து மக்கள் அனைவரும் இவ் வருட தீபாவளியை வீட்டிலிருந்தே கொண்டாடுமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் கோரிக்கைவிடுத்துள்ளார்.**

அவர் விடுத்துள்ள செய்திக் குறிப்பில், இந்துக்களது பாரம்பரிய பண்டிகைகளில் ஒன்றான தீபாவளியானது எதிர்வரும் 14ஆம் திகதி உலகவாழ் இந்துக்களால் கொண்டாடப்படவுள்ளது. நாடு எதிர்நோக்கியுள்ள கொரோனா திடீர்ப் பரவல் காலப்பகுதியில் வரும் இந்தப் பண்டிகை நாளில் நாம் கூட்டுப்பொறுப்புடன் நடந்து கொள்வது எமது அனைவரதும் நல்வாழ்வுக்கும் அவசியமாகும்.

எமது வீடுகளில் உள்ள மூத்தோர், கர்ப்பவதிகள் மற்றும் நாட்பட்ட நோய்களுடன் வாழும் உறவுகள் ஆகியோரைக் கொரோனாத் தொற்றிலிருந்து பாதுகாப்பதற்காகவும் எம்மை நாமே பாதுகாத்துக் கொள்வதற்காகவும் இந்தப் பண்டிகை தினத்தை அவரவர் வீடுகளில் இருந்து மிகவும் அமைதியாகக் கொண்டாடுமாறு எமது மக்களிடம் நாம் உரிமையோடு வேண்டிக்கொள்கிறோம்.

அயலவர்கள் மற்றும் உறவினர் வீடுகளுக்குச் செல்வதையும், புத்தாடைகள் மற்றும் அணிகலன்கள் வாங்கச் செல்வதையும் ஆலயங்களுக்குச் செல்வதையும் இவ்வருடம் தவிர்த்து வீட்டிலிருந்தவாறே பிரார்த்தனைகளில் ஈடுபடுவதன் மூலம் எதிர்நோக்கியுள்ள சுகாதாரச் சவாலை முறியடிப்போம், என்றுள்ளது.

(ஒ.214)

# சண்டையால் வந்த வினை 39 பேர் தனிமைப்படுத்தலில்

கொழும்பு, நவ. 7

ஹெட்டிப்பொல ஹொட்டலில் இடம்பெற்ற சண்டையில் காயமடைந்த நபருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இதனையடுத்து 4 பொலிஸார் மற்றும் தாதிமார் உள்பட 39 பேர் சுய தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

ஹெட்டிப்பொல ஹொட்டல் ஊழியர்களுக்கிடையே இடம்பெற்ற சண்டையில் காயமடைந்து ஹெட்டிப்பொல மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற ஊழியருக்கே கொரோனாத் தொற்று ஏற்பட்டுள்ளது.

ஹொட்டல் சண்டை தொடர்பான முறைப்பாட்டை விசாரித்த பொலிஸார் மற்றும் சிகிச்சையளித்த தாதியர் ஆகியோரே சுய தனிமைபடுத்தப்பட்டுள்ளனர். (ஒ.இ)

# முல்லைத்தீவில் தொற்று நீக்கம்

கொழும்பு,நவ.7

நாட்டில் அதிகரித்துவரும் கொரோனாத் தொற்றுக் காரணமாக முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் மற்றும் கற்சிலைமடு ஆகிய பிரதேசங்களில் தொற்று நீக்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

முல்லைத்தீவு பாதுகாப்பு படைத் தலைமையகத்தின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் ரத்நாயக்க மற்றும் 64 ஆவது பிரிவின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் அஜித் பல்லேவல ஆகியோரின் பணிப்புரைக்கமைய இந்தப் பணி இராணுவத்தினரால் முன்னெடுக்கப்பட்டது. (ஐ-ரி4)

## பெண் பணியாளர்களுக்கு

# இரவு நேரப் பணிக்கான அனுமதி விண்ணப்பங்கள் இணையத்தில்

கொழும்பு, நவ.7

கைத்தொழில் நிறுவனங்களில் தொழில்புரியும் பெண் பணியாளர்களை இரவு நேரப் பணியில் ஈடுபடுத்துவதற்கான விண்ணப்பங்களை இணையத்தின் ஊடாகச் சமர்ப்பிப்பதற்கான நடைமுறைகளை தொழில் திணைக்களம் அறிமுகப்படுத்தியுள்ளது.

நாடளாவிய ரீதியில் கைத்தொழில் நிறுவனங்களில் தொழில்புரியும் பெண் பணியாளர்களை இரவு நேரப் பணியில் ஈடுபடுத்துவதாயின் தொழில் திணைக்களப் பணிப்பாளர் நாயகத்திடம் முன்கூட்டியே அனுமதி பெற்றிருப்பது அவசியம் என்பதுடன், அது 6 மாத காலத்துக்கு ஒருமுறை புதுப்பிக்கப்பட வேண்டியது கட்டாயமாகும்.

இந்நிலையில் தற்போது கொரோனா வைரஸ் பரவல் நெருக்கடிக்கு மத்தியில் இதனை குறுங்கால மற்றும் நீண்டகால அடிப்படையில் மேலும் இலகுபடுத்துவதற்காக இணையவழி விண்ணப்பங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. www.labourdept.gov.lk என்ற முகவரியில் பிரவேசித்து, உரியவாறு அனுமதி கோரல் விண்ணப்பங்களைச் சமர்பிக்க முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-இ)

**வடமாகாண மரநடுகை மாதம்**
**கார்த்திகை 2020**

"ஒரு மரம் பட்டுப்போகுமாக இருந்தால் பட்ட அந்த மரத்துக்குப் பதிலாக அவ்விடத்தில் இன்னொரு மரத்தை நாட்டுங்கள்" - **கரோலஸ் இலினேயஸ்**

## கொரோனாப் பெருந்தொற்று

# தடுப்புக்கு ஒத்துழைப்பதாக எதிர்த்தரப்பு நடிக்கின்றது

### சாடுகிறார் இராஜாங்க அமைச்சர்

கொழும்பு, நவ. 7

கொரோனாவைக் கட்டுப்படுத்த ஒத்துழைப்பு வழங்குவதாக எதிர்த்தரப்பினர் பெயரளவில் மாத்திரம் குறிப்பிட்டுக்கொள்கிறார்கள். நெருக்கடியான சூழ்நிலையை அரசியல் தேவைக்கு பயன்படுத்திக் கொள்வதை எதிர்த்தரப்பினர் தவிர்த்துக்கொள்ள வேண்டும் என்று போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்தார்.



அவர் மேலும் தெரிவித்ததாவது: கொரோனாத் தாக்கம், பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ளவர்களுக்கு நிவாரணம் வழங்க அரசு நெருக்கடியான சூழ்நிலையில் பல செயற்பாடுகளை முன்னெடுத்துள்ளது. கொரோனாத் தடுப்பில் எதிரணி ஒத்துழைப்பதாகச் சொன்னாலும் நடைமுறையில் எவ்விதமான ஒத்துழைப்பும் இதுவரை வழங்கவில்லை.

எதிர்த்தரப்பினரது ஆதரவு இல்லாமல் தற்போதைய நெருக்கடியான சூழலை வெற்றிகொள்ள முடியும். தனித்து செயற்படவே மக்கள் பெரும்பான்மை பலத்தை வழங்கியுள்ளார்கள் - என்றார். (ஒ.இ)

# மேய்ச்சல் நிலம் அடாத்தாகப் பிடிப்பு

### முசலியில் 4 அமைப்புக்கள் ஜனாதிபதிக்கு கடிதம்

மன்னார், நவ.7

மன்னார் முசலி பிரதேச செயலக பிரிவில் கால் நடைகளின் மேய்ச்சலுக்கு என ஒதுக்கப்பட்ட அரச காணியை ஒரு சில தனியார்கள் அடாத்தாகப் பிடித்துள்ளதால்; கால்நடைகளும், அப்பகுதியில் அமைந்துள்ள சிறிய குளத்தை நம்பி பயிர்செய்வோரும் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளனர் என்று ஜனாதிபதிக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

முசலி பிரதேசத்தைச் சேர்ந்த நான்கு அமைப்புக்கள் ஒன்றிணைந்து மன்னார் மாவட்ட பதில் செயலர் ஊடாக ஜனாதிபதிக்கு அந்தக் கடிதத்தை அனுப்பியுள்ளன.

முசலி பிரதேச செயலாளர் பிரிவின் பண்டாரவெளி கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட கள்ளிக் குளத்தின் கீழ் உள்ள அரச காணியை ஒரு சிலர் அடாத்தாகப் பிடித்து வருகின்றார்கள்.

2011ஆம் ஆண்டு அந்தக் காணி சட்டபூர்வமாக நிள அளவீடு செய்யப்பட்டு மேய்ச்சல் நிலத்துக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. ஆனால் காலத்துக்கு காலம் இக் காணி ஒரு சிலரால் அடாத்தாகப் பிடிக்கப்பட்டு வருகின்றது.2014 ஆம் ஆண்டு தொடக்கம் இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் கவனத்துக்கு கொண்டு செல்லப்பட்டும் அது தொடர்பில் நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை என்று.அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-60)

# மோ.சைக்கிள் விபத்தில் அரச பணியாளர் காயம்

சாவகச்சேரி, நவ.7

கடமை முடிந்து வீடு செல்வதற்காக மோட்டார் சைக்கிளில் வீதியோரத்தில் தயாராக நின்ற தென்மராட்சி பிரதேச செயலக அபிவிருத்தி அலுவலரை கொடிகாமம் நோக்கி வேகமாக வந்த மோட்டார் சைக்கிள் மோதியது. இதன் போது அலுவலர் காயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார் .

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் மாலை 4.30 மணிக்கு பிரதேச செயலகம் முன்பாக இடம்பெற்றது. கொடிகாமம் மத்தியைச் சேர்ந்த நடராசா சிவகுமார் (வயது -43 ) என்ற அலுவலரே இவ்வாறு காமடைந்தார். (ப-9)



# நானாட்டான் பிரதேச சபை பாதீடு நிறைவேற்றம்

மன்னார்,நவ.7

நானாட்டான் பிரதேச சபையின் 2021 ஆம் ஆண்டுக்கான பாதீடு ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

பாதீடு சம்பந்தமான கூட்டம் தவிசாளர் தி.பரஞ்சோதி தலைமையில் நேற்று சபையின் மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. உப தவிசாளர் உள்ளிட்ட 15 உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

தவிசாளர் பரஞ்சோதி கருத்துத் தெரிவிக்கையில்:

"2021ஆம் ஆண்டுக்கான பாதீடு உறுப்பினர்களின் ஆதரவோடு வெற்றிபெற்றுள்ளது மகிழ்ச்சியளிக்கிறது.

இந்த வருடத்தின் 70.6 மில்லியன் வரவில் நிர்வாகச் செலவு, அத்தியாவசிய சேவைகள், கழிவு முகாமைத்துவம்,வீதி பராமரிப்பு என்று மக்களின் நலன் சார்ந்த விடயங்களுக்காக செலவிடப்பட்டுள்ளது.

மேலும் இந்த வருடம் கொரோனா பிரச்சினையால் எமது சபைக்கு 25 வீதம் வருமானம் இழப்பு ஏற்பட்டுள்ளது.

அடுத்த வருடம் (2021) எமது சபைக்கு அதிக வருமானங்கள் கிடைக்கும் வகையில் வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன - என்றார். (ஐ-213)



# வறுமைக்குட்பட்டோருக்கு உலர் உணவுப் பொதிகள்

வடமராட்சி, நவ.7

கொக்கிளாய், கொக்குத்தொடுவாய், கருநாட்டங்கேணி ஆகிய கிராமங்களில் நாளாந்த உணவுக்கு கஷ்ரப்படும் குடும்பங்களில் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு ஒரு தொகுதி உலர் உணவுப் பொதிகள் நேற்று வழங்கப்பட்டன.

அமரர் சுபத்திரன் சிவசங்கரின் 15 ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு தாய்த் தமிழ் பேரவையின் ஒழுங்கமைப்பில், சுபத்திரனின் பெற்றோரின் நிதிப்பங்களிப்பில் அந்தப் பொதிகள் வழங்கப்பட்டன.

அந்தக் குடும்பங்களிலுள்ள பாடசாலை மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களும் இதன்போது வழங்கப்பட்டன. இந்தப் பொருள்கள் கருநாட்டங்கேணி தாய்த் தமிழ் மகளிர் பேரவையின் தலைவி திருமதி சி.தனாவிடம், பேரவையின் உபதலைவர் சி.ராஜா வழங்கினார். (ப-222)

# நானாட்டான் பிரதேசத்தில் மரக்கன்றுகள் நடுகை

மன்னார், நவ.7

மரநடுகை மாதத்தை முன்னிட்டு மன்னார் நானாட்டான் பிரதேச செயலக வீதியின் இரு மருங்கிலும் நேற்று மரக்கன்றுகள் நடுகை செய்யப்பட்டன.

வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதனின் வழிநடத்தலில், குணரெத்தினம் பவுண்டேஷனின் அனுசரணையில் நானாட்டான் பிரதேச செயலாளர் மா.சிறிஸ்கந்தகுமார் தலைமையில் நிகழ்வு நடைபெற்றது.

இந்தத் திட்டத்தில் மூவாயிரம் மரங்கள் மன்னார் மாவட்டம் முழுவதும் நடப்படவுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டது.

நிகழ்வில் நானாட்டான் பிரதேச சபைத் தவிசாளர் தி.பரஞ்சோதி, உப தவிசாளர் புவனம் மற்றும் சபை உறுப்பினர்கள், நானாட்டான் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.(ஐ-213)



# ஒரு கிலோ மஞ்சள் தூள் மன்னாரில் 5,000 ரூபா

### மறைமுகமாக விற்பனை

மன்னார், நவ.7



மன்னார் நகரப் பகுதியில் உள்ள சில பல்பொருள் விற்பனை நிலையங்களில் ஒரு கிலோ மஞ்சள் தூள் 4 ஆயிரம் ரூபா முதல் 5 ஆயிரம் ரூபா வரை விற்பனை செய்யப்படுகிறது என்று நுகர்வோர் விசனம் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் பாதிக்கப்பட்ட மக்கள் மேலும் தெரிவித்ததாவது;

மன்னார் நகரில் உள்ள சில பல்பொருள் விற்பனை நிலையங்களில் மஞ்சள் தூள் மறைத்து வைத்து நாளுக்கு நாள் அதிகரித்த விலைக்கு விற்பனை செய்யப்பட்டு வருகின்றது. தற்போது 100 கிராம் மஞ்சள் தூள் 400 ரூபா முதல் 500 ரூபா வரையில் விற்பனை செய்யப்படுகிறது.

எனவே உரிய அதிகாரிகள் குறித்த விடயத்தில் கூடிய கவனம் செலுத்தி மஞ்சள் தூளை கட்டுப்பாட்டு விலையுடன் விற்பனை செய்ய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். இதேவேளை இந்தியாவிலிருந்து சட்ட விரோதமாக மன்னாருக்குக் கடத்தி வரப்படுகின்ற மஞ்சள் கட்டிகள் மன்னாரில் உள்ள வர்த்தகர்கள் சிலருக்கு விற்பனை செய்யப்படுகின்றன. அதனைக் குறைந்த விலைக்குப் பெறும் அவர்கள் மஞ்சள் கட்டியை, தூளாக்கி அதி கூடிய விலைக்கு விற்பனை செய்கின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது - என்றனர். (ப- 56)

# 20 க்குள் இரகசியமாக புகுத்தப்பட்ட தேசிய அரசு

## கீழ்த்தரமான செயற்பாடு என்று நீதி அமைச்சர் மீது குற்றச்சாட்டு

கொழும்பு, நவ. 7

**20ஆவது அரசமைப்புத் திருத்த வரைவில் தேசிய அரசு தொடர்பான சரத்து தந்திரமாக உட்புகுத்தப்பட்டுள்ளது என்று நீதியமைச்சர் அலி சப்றிக்கு எதிராகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.**

பொதுமக்களுடனோ அல்லது நாடாளுமன்ற உறுப்பினர்களுடனோ முழுமையான கலந்துரையாடல்களை நடத்தாது, குழு நிலை விவாதத்தின் குழப்பத்துக்கு மத்தியிலும் இவ்வாறு உட்புகுத்தப்பட்டுள்ளது என்று சிரேஷ்ட சட்டத்தரணி கல்யாணந்த திரனாகம குற்றஞ்சாட்டியுள்ளார்.

19ஆவது திருத்தச் சட்டம் கூடாது என்றும், அதனை நீக்கவேண்டும் என்றும் கூறி, அதில் அடங்கியுள்ள மிக மோசமான சரத்தை 20ஆவது திருத்தச் சட்டத்துக்குள் உள்ளடக்கியமை ஒழுக்கக்கேடான செயல் என்றும் சட்டத்தரணி தெரிவித்துள்ளார்.

விவாதங்களை நடத்தவில்லை, அமைச்சரவையின் எண்ணிக்கையைக் குறைப்பது தொடர்பான சரத்தை மாத்திரமே உள்ளடக்க வேண்டும் என்ற பொதுவான நிலைப்பாடு மாத்திரமே இருந்தது. ஆனால், இதனுடன் சேர்த்து தேசிய அரசு தொடர்பான சரத்தையும் இரகசியமான முறையில் உள்ளடக்கியுள்ளனர். இது தவறானது, இவ்வாறு செய்த விதம் மோசமானது, அந்தக் கொள்கையும் தவறானது.

மத அடிப்படைவாதிகளை அரசுடன் இணைத்து அமைச்சுப் பதவிகளை வழங்கப் போகிறார்களா என மக்கள் கேள்வி எழுப்புகின்றனர் என்றும் சட்டத்தரணி தெரிவித்தார். (து-இ)

# 25 பேருக்கு மட்டுமே தொழுகைக்கு அனுமதி

கொழும்பு, நவ. 7

தனிமைப்படுத்தல் ஊரடங்கு இல்லாத பகுதிகளில் ஒரே நேரத்தில் தொழுகைக்காக பள்ளிவாசல்களில் ஒன்றுகூடக்கூடிய நபர்களின் எண்ணிக்கை 25ஆக குறைக்கப்பட்டுள்ளது என முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் ஏ.பி.எம்.அஷ்ரப் தெரிவித்தார்.


அவர் மேலும் தெரிவித்ததாவது:

சுகாதார வழிமுறைகளைப் பேணி பள்ளிவாசல்களை நடாத்துவது சிரமம் என நிர்வாகிகள் தொடர்ந்து தெரிவித்து வருவதோடு பள்ளிவாசல்களை மூடி விடுமாறு வக்பு சபையை வலியுறுத்தி வருகின்றனர். ஆகவே, தொழுகின்றவர்கள் பள்ளிவாசலின் மீது அன்பிருந்தால் நிச்சயமாக இந்த இறுக்கமான நிபந்தனைகளைப் பேணுவதற்கு பள்ளிவாசல்களுக்கு ஒத்துழைப்பு வழங்குவார்கள் என நம்புகிறோம். இல்லையேல், பள்ளிவாசல்கள் மூடப்படுவதற்கு அவர்களே காரணமாகி விட நேரிடும் எனவும் அவர் அறிவித்துள்ளார்.

50 பேருக்கு ஒரே சமயத்தில் தொழுவதற்கு முன்னர் அனுமதி வழங்கப்பட்டிருந்த நிலையில் தற்போது 25ஆக குறைக்கப்பட்டுள்ளது. சில பகுதிகளில் பொதுச் சுகாதார அதிகாரிகளினதும் பொலிஸாரினதும் உத்தரவில் பள்ளிவாசல்கள் மூடப்பட்டுள்ளன என அறிய வருகிறது - என்றார். (ம-9)

# மாத்தளை மாவட்டத்தில் 31 கொவிட் தொற்றாளர்கள்

மாத்தளை,நவ.7



மாத்தளை மாவட்டத்தில் கொரோனாத் தொற்றாளர்கள் 31 பேர் இதுவரை அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று மாவட்டச் செயலாளர் எஸ்.எம்.ஜி.கே. பெரேரா தெரிவித்துள்ளார்.

மாத்தளை மாவட்டத்தினுள் இதுவரை இனங்காணப்பட்ட அனைத்து தொற்றாளர்களும் மினுவாங்கொட மற்றும் பேலியகொட தொற்றாளர்களுடன் தொடர்புடையவர்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

மாவட்டத்தில் 339 குடும்பங்கள் தனிமைப்படுத்தப்பட்டு கண்காணிக்கப்பட்டு வருகின்றனர் எனவும் அவர் தெரிவித்தார். (ஜ-இ)

# நாடாளுமன்றில் பசில்? அரசுக்கு விருப்பமாம்

கொழும்பு, நவ.7



பசில் ராஜபக்சவை நாடாளுமன்றத்தில் பார்ப்பதற்கு அரசாங்கம் விரும்புகின்றது என அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

பொதுஜனபெரமுனவைத் தொடங்கியவர்களில் பசில் ராஜபக்சவும் ஒருவர். அந்தக் கட்சி ஆரம்பிக்கப்பட்டமைக்கு அவரும் காரணம்.

கட்சியை ஆரம்பித்து நான்கு வருடங்களுள் பசில் ராஜபக்ச ஒரு புரட்சியை ஏற்படுத்தினார். நாங்கள் அவரை நாடாளுமன்றத்தில் பார்க்க விரும்புகின்றோம். அவருக்கு உரிய கௌரவத்தை வழங்க வேண்டும் - என்றார். (ப)

# இங்கிலாந்து திருப்பவுள்ள மேலும் 82 கொள்கலன்கள்

கொழும்பு, நவ.7




சட்டவிரோதமான முறையில் நாட்டுக்கு கொண்டு வரப்பட்ட மேலும் 82 கொள்கலன்களை மீண்டும் இங்கிலாந்துக்கு திருப்பி அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என இலங்கை சுங்கத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கடந்த மாதம் 30 ஆம் திகதி 20 கழிவுக் கொள்கலன்கள் இங்கிலாந்துக்கு திருப்பி அனுப்பப்பட்டன.

ஐக்கிய இராஜ்ஜியத்திலிருந்து 242 கொள்கலன்களில் 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் கழிவுகள் அடங்கிய கொள்கலன் கள் சட்டவிரோதமாக நாட்டுக்கு கொண்டு வரப்பட்டமை குறிப்பிடத்தக்கது.(ஐ-இ)

# பாதுகாப்புச் செயலரை சந்தித்தார் புதிய தளபதி

கொழும்பு, நவ. 7

புதிதாக நியமிக்கப்பட்டுள்ள விமானப்படைத் தளபதி எயார் மார்ஷல் சுதர்சன பத்திரன பாதுகாப்புச் செயலாளர் மேஜர் ஜெனரல் (ஓய்வு) கமால் குணரத்னவை கடந்த செவ்வாய்க்கிழமை சந்தித்துப் பேசியுள்ளார்.

எயார் சீப் மார்ஷல் சுமங்கள டயஸ் சேவையிலிருந்து ஓய்வுபெற்றதையடுத்து ஏற்பட்ட விமானப் படைத் தளபதி வெற்றிடத்துக்கு எயார் மார்ஷல் பத்திரன நியமிக்கப்பட்டார். இவர் இலங்கை விமானப் படையின் 18ஆவது தளபதி.

சந்திப்பின்போது இருவரும் நினைவுச் சின்னங்களைப் பரிமாறிக் கொண்டனர்.

அவர் விமானப் படைத் தளபதியாக நியமிக்கப்படுவதற்கு முன்னர் விமானப்படையின் பிரதம அதிகாரியாகக் கடமையாற்றியுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

எயார் மார்ஷல் பத்திரன, சுப்பர்சொனிக் விமான பயிற்சிபெற்ற முதல் குழு விமானிகளில் ஒருவர். அமெரிக்காவில் உள்ள அலபாமா பல்கலைக்கழகத்தில் நடவடிக்கை கலை மற்றும் அறிவியல் பாடநெறியில் முதுமாணிப் பட்டம் பெற்ற இலங்கையின் முதலாவது விமானப்படை அதிகாரி இவராவார். (து-இ)

*பிரபல கிரிகெட் வீரர்*

# உஸ்மான் கவாஜாவின் சகோதரனுக்கு சிறை

கொழும்பு, நவ.7



ஆஸ்திரேலிய அணியின் பிரபல கிரிகெட் வீரர் உஸ்மான் கவாஜாவின் சகோதரர் அர்சலான் கவாஜாவுக்கு ஆஸ்திரேலிய நாட்டு நியூசவுத்வேல்ஸ் நீதிமன்றம் நான்கரை ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்துள்ளது.

சக பல்கலைக்கழக மாணவரான இலங்கை மாணவன் மீது போலி பயங்கரவாதக் குற்றச்சாட்டுக்களை சுமத்தினார் என்ற குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட அர்சலான் கவாஜா பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தார். எனினும் பிணைக் காலத்தில் சாட்சியை மிரட்டினார் என்று மீண்டும் கைதானார். இந்த நிலையில் இடம்பெற்ற வழக்கு விசாரணைகளில் அவர் நீதிமன்றில் குற்றத்தை ஒப்புக்கொண்டதன் அடிப்படையில் அவருக்கு நான்கரை ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. (ஐ-இ)

# கொரோனாவுக்கு சிறந்த சிகிச்சை!

## தொற்றிலிருந்து மீண்டோர் பாராட்டு மழை

திருமலை, நவ.7

கொரோனாத் தொற்று ஏற்பட்டு திருகோணமலை ஈச்சிலம்பற்று பிரதேச மருத்துவமனையில் சிகிச்சை பெற்று குணமடைந்து வெளியேறிய பொதுமக்கள் மருத்துவமனையின் செயற்பாட்டுக்குத் தங்களின் நன்றிகளையும், பாராட்டுக்களையும் தெரிவித்து வருகின்றனர். அங்கு தாம் கவனிக்கப்பட்ட மற்றும் பராமரிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பில் அவர்கள் சமூக வலைத்தளங்களில் பாராட்டி பதிவுகளை மேற்கொண்டு வருகின்றனர். திருகோணமலை ஈச்சிலம்பற்று பிரதேச மருத்துவமனையில் குணமடைந்த முதலாவது தொகுதி கொரோனா நோயாளர்கள் 28 பேர் கடந்த புதன்கிழமை வீடு திரும்பினர். அவர்களே இவ்வாறு பாராட்டுக்களைத் தெரிவித்துவருகின்றனர். (ஐ-214)

# கடலட்டை பிடித்த 40 பேர் கைது

கொழும்பு, நவ.7
கடந்த சில நாள்களாக வடமேல் மாகாணத்தின் கடற்பரப்பில் மேற்கொள்ளப்பட்ட விசேட சோதனைகளின் போது சட்டவிரோதமாக கடல் அட்டைகளைப் பிடித்த குற்றச்சாட்டில் 40 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த சந்தேகநபர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட உள்ளது என கடற்படையினர் தெரிவித்துள்ளனர். (ப-இ)

## கொரோனா பெருந்தொற்று:

# அடுத்த வாரம் முதல் கட்டுப்பாடு இறுக்கம்



**கொழும்பு, நவ. 7**
**கொரோனா தாக்கத்தைக் கட்டுப்படுத்தும் சுகாதார பாதுகாப்பு நடவடிக்கைகள் அடுத்த வாரம் தொடக்கம் கடுமையான முறையில் செயற்படுத்தப்படும் என காணி விவகார அமைச்சர் எஸ்.எம்.சந்திரசேன தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது:
கொரோனா தாக்கத்தைக் கட்டுப்படுத்த மேல் மாகாணம் உட்பட பெரும்பாலான பகுதிகளில் தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. பொதுமக்களின் ஒத்துழைப்பு இருந்தால் மாத்திரமே தற்போதைய நெருக்கடியான சூழ்நிலையை வெற்றிகொள்ள முடியும். மேல் மாகாணத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் தொடர்பில் இவ்வாரம் இறுதித் தீர்மானம் எடுக்கப்படும்.
சுகாதார பாதுகாப்பு நடவடிக்கைகள் எதிர்வரும் வாரம் தொடக்கம் கடுமையாகச் செயற்படுத்தப்படும். பொதுமக்களின் ஒத்துழைப்பு இருந்தால் மாத்திரமே நெருக்கடி நிலையினை வெற்றிகொள்ள முடியும். ஆகவே பொதுமக்கள் பொறுப்புடன் செயற்பட வேண்டும் என்றார். (ம-இ)

# பன்றி வளர்ப்பால் துர்நாற்றம் அதிகம்

## வண்ணாங்குளம் மக்கள் விசனம்



முல்லைத்தீவு, நவ.7
முல்லைத்தீவு, வண்ணாங்குளம் பகுதியில் கடற்கரையை அண்மித்த பகுதியில் உள்ள பன்றி வளர்ப்புப் பண்ணையிலிருந்து வரும் துர்நாற்றத்தை தாங்கிக்கொள்ள முடியாதுள்ளது என்று பாதிக்கப்பட்ட மக்கள் விசனம் தெரிவித்தனர்.
இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவித்ததாவது;
கடற்கரையை அண்மித்த பகுதியில் பெருமெடுப்பில் அமைக்கப்பட்டுள்ள பன்றி வளர்ப்புப் பண்ணையிலிருந்து வரும் துர்நாற்றம், சுவாசிக்க முடியாதளவுக்கு பெரும் சிரமங்களை ஏற்படுத்துகிறது. இது தொடர்பில் பொதுச் சுகாதரப் பரிசோதகர்கள் மற்றும் சுற்றுச்சூழல் அதிகார சபையினர் உள்ளிட்ட அனைவருக்கும் அறிவித்தும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. பிரதேச சபை உள்ளிட்ட திணைக்களங்கள் கடற்கரையை அழகுபடுத்தி, கடற்கரைப் பகுதியைச் சுத்தமாக வைத்திருக்க வேண்டும் என அறிவித்து வந்தாலும் கடற்கரைப் பகுதியிலேயே குறித்த பன்றி வளர்ப்புத் திட்டம் மேற்கொள்ளப்படுகின்றது.
சம்மந்தப்பட்ட அதிகாரிகள், குறிப்பாக பிரதேச சபையினர் இது குறித்து உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றனர். (ப-19)

# ஓரிரு நாள்களில் மழைவராவிடில் நெற்பயிர்கள் பாதிக்கப்படும் நிலை

யாழ்ப்பாணம், நவ. 7
பெரும்போக நெற்செய்கைக்கான பருவமழை இன்னும் சில நாள்களில் பெய்யாவிடில் குடாநாட்டில் நெற்பயிர்கள் பாதிக்கப்படலாம் என்று விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.
கூடுதலான வயல்களில் தண்ணீர் இன்றி பயிர்கள் சோர்ந்துபோயுள்ளன என்றும் தெரிவித்தனர்.
குறிப்பாக இந்த வாரத்தில் பருவமழை பெய்ய ஆரம்பிக்க வேண்டும். மழை பெய்யத் தவறும் பட்சத்தில் பயிர்கள் பாதிக்கப்படலாம் என்று விவசாயத் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.
கூடுதலான விவசாயிகள் மழையை எதிர்பார்த்துள்ளனர்.
மழை வேண்டி கோவில்களில் சிறப்பு பூசைகள், இளநீர் அபிஷேகம் என்பனவும் இடம்பெற்று வருகின்றன.
குடாநாட்டில் இந்தப் போகத்தில் மட்டும் சுமார் 12ஆயிரம் ஹெக்ரேயர் நிலப்பரப்பில் நெற்செய்கை இடம்பெறுகின்றது என்று தெரிவிக்கப்பட்டது. (த-17)






வடமராட்சி கிழக்கு உடுத்துறையைச் சேர்ந்த ஓய்வு நிலை ஆசிரியையான திருமதி புஷ்பராணி சங்கரப்பிள்ளையின் முதலாம் ஆண்டு நினைவாக, அவரது குடும்பத்தினால் பொருளாதார நிலையில், பின்தங்கிய குடும்பத்தைச் சேர்ந்த ஒருவருக்கு நேற்று முன்தினம் துவிச்சக்கரவண்டி ஒன்று அன்பளிப்புச் செய்யப்பட்டது. (ப-9)

# மன்னார் கொலைக்கு செல்வம் எம்.பி. கண்டனம்

மன்னார், நவ. 7
மாந்தை மேற்கு பிரதேச செயலகத்தில் கிராம அலுவலராகக் கடமையாற்றிய விஜியேந்திரன் படுகொலை செய்யப்பட்டமையை வன்மையாகக் கண்டிக்கின்றேன் என்று வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் குறிப்பிட்டுள்ளார்.
அவர் அனுப்பிய கண்டனக் குறிப்பில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.
பதில் நிர்வாக அலுவலராகவும் கடமையாற்றி வந்தார். கொலையின் பின்னணியில் நிற்கும் நபர்கள் யார் என்பதை அடையாளம் கண்டு அவர்களைச் சட்டத்தின் முன்நிறுத்தி உரிய தண்டனை பெற்றுக்கொடுக்க வேண்டும். படுகொலைக் கலாசாரம் நமது மண்ணிலிருந்து களையப்பட வேண்டும்.
இவ்வாறான கொலைகள் மன்னார் மாவட்டத்தில் அதிகரித்து வருகின்றன. இது சட்டம் ஒழுங்குசார் பிரச்சினையை தோற்றுவிப்பதோடு எமது மாவட்டத்தின் அமைதிக்கும் பங்கம் விளைவிக்கும் என்று குறிப்பிட்டுள்ளார்.
விஜியேந்திரன் ஆத்திமோட்டைப் பகுதியில் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு மர்மமான முறையில் உயிரிழந்த நிலையில் மீட்கப்பட்டிருந்தார். (த-213)

# கொரோனாச் சாவுகள் உயர்வு; மக்களே மிகவும் அவதானம்!


## அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை!

கொழும்பு, நவ.7

**இலங்கையில் கடந்த இரண்டு வாரங்களில் மாத்திரம் கொரோனாத் தொற்றால் 11 மரணங்கள் பதிவாகியுள்ளமை மிகவும் ஆபத்தான நிலைமை. இதனால் மக்கள் மிகவும் அவதானமாக இருக்க வேண்டும் என்றும் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.**



நாட்டில் முதல் இரண்டு கொரோனாத் தொற்றுகளின் போதும் 9 மாதங்களில் 13 மரணங்கள் மாத்திரமே பதிவாகியுள்ளன எனவும், மூன்றாம் அலையின்போது கடந்த இரண்டு வாரங்களில் மாத்திரம் 11 மரணங்கள் பதிவாகியுள்ளன எனவும் மருத்துவர் ஹரித அளுத்கே தெரிவித்துள்ளார். இவர்களில் சிலர் உயிரிழந்த பின்னரே கொரோனாத் தொற்றுக்குள்ளாகி இருந்தனரென இனங்காணப்பட்டிருந்தது. கொரோனாவால் அதிகளவு உயிரிழப்பு வீதம் எதிர்காலத்தில் ஏற்பட வாய்ப்புள்ளது எனவும், இதனால் மக்கள் மிகவும் அவதானமாக இருக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ற-இ)




# ஒரு மீற்றரைத் தாண்டியும் பயணிக்கும் கொரோனா

## அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் எச்சரிப்பு

கொழும்பு, நவ.7

கொரோனா வைரஸ் ஒரு மீற்றருக்கு மேல் பயணிக்காது என்று கூற முடியாது. எனவே ஒரு மீற்றர் இடைவெளி என்பதை விட முடிந்தளவு ஒரு மீற்றர் அல்லது அதைவிடக் கூடிய இடைவெளியைப் பேண வேண்டும் என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் ஹரித அலுத்கே தெரிவித்துள்ளார்.

"பி.சி.ஆர். பரிசோதனையை விட செலவு குறைந்த முறையில் துரிதமாக முன்னெடுக்கப்படும் பரிசோதனைக்கு இலங்கை மாற வேண்டும். அத்தோடு மீண்டும் மீண்டும் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்"என்றும் அவர் கூறினார். (ற-இ)

# கொரோனா சிகிச்சைக்கு இன்னும் இரு நிலையங்கள்

களுத்துறை, நவ.7

களுத்துறை மாவட்டத்தில் கொரோனா நோயாளர்களுக்கு சிகிச்சையளிப்பதற்காக, இரண்டு மத்திய நிலையங்களைப் பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, அளுத்கம தர்கா நகர் தேசிய கல்வியியல் கல்லூரி மற்றும் களுத்துறையிலுள்ள கல்வியியல்பீடம் என்பவற்றையே கொரோனா நோயாளர்களுக்கு சிகிச்சை வழங்கும் நிலையமாக பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ந -இ)

# மத்திய தபால் நிலைய சேவைகள் நிறுத்தம்

கொழும்பு, நவ.7

கொவிட் 19 தொற்றின் காரணமாக கொழும்பு மத்திய தபால் பரிமாறல் கடமைகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளன என தபால்மா அதிபர் ரஞ்ஜித் ஆரியரத்ன தெரிவித்துள்ளார்.

கொழும்பு - 10 டி.ஆர் விஜயரத்ன மாவத்தையில் அமைந்துள்ள மத்திய தபால் பரிமாறல் சேவையில் ஈடுபட்டிருந்த பணியாளர் ஒருவர் கொவிட் 19 தொற்றுக்குள்ளானவராக உறுதிப்படுத்தப்பட்டுள்ளார். இதையடுத்து அதன் அனைத்து நடவடிக்கைகளும், பொதுமக்கள் அலுவல்களும் மீண்டும் அறிவிக்கும் வரையில் தற்காலிகமாக இடைநிறத்தப்பட்டுள்ளன என அவர் தெரிவித்தார். சுகாதாரப் பிரிவின் ஆலோசனைக்கு அமைய இங்கு கிருமித் தொற்று நீக்கப்பட்ட பின்னர் மீண்டும் கடமைகள் ஆரம்பிக்கப்படும் தினம் தொடர்பாக அறிவிக்கப்படும் என்று தபால்மா அதிபர் நேற்று வெளியிட்டுள்ள ஊடக அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ளார். (ந-இ)



# உயர்தரப் பரீட்சை நேற்றுடன் நிறைவு

கொழும்பு, நவ.7

கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சைகள் நேற்றுடன் நிறைவடைகின்றன.

கடந்த ஒக்ரோபர் மாதம் 12 ஆம் திகதி முதல் நாடளாவிய ரீதியில் உள்ள 2 ஆயிரத்து 648 பரீட்சை மத்திய நிலையங்களில் உயர்தரப் பரீட்சைகள் ஆரம்பமாகின. இம்முறை பரீட்சைக்காக 3 லட்சத்து 62 ஆயிரத்து 824 பரீட்சார்த்திகள் தெரிவுசெய்யப்பட்டிருந்தனர்.

இதேவேளை, இம்முறை ஐ.டி.எச் வைத்தியசாலை மற்றும் தனிமைப்படுத்தல் முகாம்களிலும் பரீட்சைகள் இடம்பெற்றன என பரீட்சைகள் ஆணையாளர் தெரி வித்துள்ளார். (ந-இ)



# கொரோனாவிலிருந்து விடுபட வவுனியாவில் பிரார்த்தனை

வவுனியா, நவ.76

கொரோனாத் தாக்கத்தில் இருந்து விடுபட அருளாசி வேண்டி வவுனியா கந்தசாமி ஆலயத்தில் விசேட பூஜை வழிபாடு நேற்றுக் காலை இடம்பெற்றது.


இவ் வழிபாட்டில் மாவட்ட அரச அதிபர், அரச அதிகாரிகள், பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், ஆலய நிர்வாகத்தினர் மற்றும் பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ந -18)


# தனிமைப்படுத்தலை முடித்தவர் வீதியில் விழுந்து திடீர்ச் சாவு

புத்தளம், நவ.7


புத்தளம் தலைமையகப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் வீதியில் பயணித்துக்கொண்டிருந்த நபரொருவர், திடீரென வீதியோரத்தில் விழுந்து உயிரிழந்துள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

14 நாள்கள் தனிமைப்படுத்தலை நிறைவு செய்து, வீட்டுக்கு திரும்பிய 55 வயதுடைய குடும்பஸ்தர் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். சடலம் வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன் உயிரிழந்த நபரின் இரத்த மாதிரிகள், பி.சி. ஆர். பரிசோதனைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. (ந-இ)





# படையெடுக்கின்றது கொரோனா!



### துறைமுக ஊழியர்களுக்கு.....

கொழும்பு, நவ.7
மேலும் 11 துறைமுக ஊழியர்களுக்கு கொவிட்-19 தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.
கடந்த சில தினங்களுக்கு முன்னர் துறைமுக ஊழியர்களிடம் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனைகளுக்கு அமைய குறித்த தொற்றாளர்கள் இனங்காணப்பட்டு உள்ளனர் என அதிகாரிகள் தெரிவித்தனர். (ந -இ)

### நகரசபை ஊழியர்களுக்கு

கொலன்னாவை நகரசபை ஊழியர்கள் மூவருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.
அதன்படி கொலன்னாவை நகர சபை அதிகார பிரிவில் இதுவரை 86 கொரோனாத் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். (ந-இ)

### சிறுவர் மருத்துவமனையில்

கொழும்பு, நவ.7
கொழும்பு, லேடி ரிஜ்வே சிறுவர் மருத்துவமனையில் இதுவரை 32 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.
இவர்களில் 20 பேர் சிறுவர்கள் எனவும் 12 பேர் கர்ப்பிணிகள் எனவும் மருத்துவமனைப் பணிப்பாளர் தெரிவித்தார். ஆயினும் மருத்துவமனையில் வழமைபோன்று மருத்துவ சேவைகள் எந்த வித இடையூறும் இல்லாமல் நடந்து வருகின்றன என அவர் மேலும் தெரிவித்தார். (ந-இ)

### பொலிஸாருக்கு...!

கொழும்பு, நவ.7
மேல் மாகாணத்தில் புதிதாக 199 பொலிஸ் அதிகாரிகளுக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என கொவிட்-19 பரவலைத் தடுப்பதற்கான தேசிய செயற்பாட்டு நிலையம் தெரிவித்துள்ளது. இதன் மூலம் கொரோனாவால் பாதிக்கப்பட்ட பொலிஸாரின் எண்ணிக்கை 358 ஆக உயர்ந்துள்ளது.
இதேவேளை தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கு அனுப்பப்பட்ட பொலிஸ் அதிகாரிகளின் எண்ணிக்கை 258 ஆக உயர்ந்துள்ளதுடன், சுயதனிமைப்படுத்தலுக்கு உள்ளாக்கப்பட்ட பொலிஸ் அதிகாரிகளின் எண்ணிக்கை ஆயிரத்து 350 ஆக பதிவாகியுள்ளது. (ந -இ)

### பொம்மை தொழிற்சாலையில்

கொழும்பு, நவ.7
வத்தளை ஹெந்தல கெரவலப்பிட்டியவில் உள்ள பொம்மைகள் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றில் பணிபுரிந்த மேலும் 68 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது. ஏற்கனவே அந்தத் தொழிற்சாலையில் 51 பேருக்கு கொரோனா தொற்றியிருந்த நிலையிலேயே இப்போது மேலும் 68 பேருக்கு தொற்று இருப்பது தெரியவந்துள்ளது.
தொழிற்சாலையில் 693 ஊழியர்கள் பி.சி.ஆர் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டனர். பி.சி.ஆர் சோதனைகளின் முடிவுகளின்படி, இதுவரை தொழிற்சாலையில் இருந்து மொத்தம் 119 கொரோனா தொற்றாளர்கள் பதிவாகியுள்ளனர். சுமார் 400 பி.சி.ஆர் சோதனைகளின் முடிவுகள் இன்னும் பெறப்படவில்லை.

### அரச அச்சக ஊழியர்களுக்கு...!

கொழும்பு, நவ.7
பொரளையில் உள்ள அரச அச்சக நிறுவனத்தின் இரண்டு ஊழியர்களுக்கு கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.
இதனையடுத்து இரண்டு நோயாளிகளும் அவர்களுடன் பழகிய 6 ஊழியர்களும் தனிமைப்படுத்தல் மையங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளனர் என்று அரச பத்திரிகை நிறுவன செயலாளர் கங்கனி கல்பனா லியானகே தெரிவித்தார். கடந்த 3 ஆம் திகதி நிறுவனத்தின் 70 ஊழியர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட கொரோனா சோதனைகள் மூலம் இவர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.
திணைக்களத்தின் அச்சிடும் நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டு, அத்தியாவசிய அச்சிடும் பணிகள் நாரஹன்பிட்டிய கிளையில் மேற்கொள்ளப்படுகின்றன.

தொற்றாளர்களோடு

# தொடர்புறாமல் இருக்க புதிய நடைமுறை அமுல்



கொழும்பு, நவ.7
ஏனைய சாதாரண நோய்களால் பாதிக்கப்பட்டவர்கள் கொரோனா அச்சம் காரணமாக மருத்துவமனைகளுக்கு செல்வதைத் தவிர்த்துக்கொள்ளகூடாது என்று தொற்றுநோயியல் பிரிவின் தலைமை அதிகாரி மருத்துவர் சுதத் சமரவீர தெரிவித்துள்ளார்.
சாதாரண நோயாளிகள் கொரோனா நோயாளிகளுடன் தொடர்புகொள்வதைத் தடுப்பதற்கான டிரையேஜ் என்ற நடைமுறையை மருத்துவ பணியாளர்கள் பின்பற்றி வருகின்றனர் என்று அவர் தெரிவித்துள்ளார்.
இந்த நடைமுறையின் மூலம் வெளிநோயாளர்கள் பிரிவிலேயே கொரோனா நோயாளர்களையும், நோய் அறிகுறிகள் உள்ளவர்களையும் அடையாளம் காணமுடியும் என்று அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ற-இ)



# கொரோனாச் சிகிச்சைக்கு 50 வென்டிலேட்டர்கள்

கொழும்பு, நவ.7
இலங்கையில் கொரோனாச் சிகிச்சை சேவையைப் பலப்படுத்த 80 மில்லியன் ரூபா பெறுமதியான 50 வென்டிலேட்டர்கள் நேற்று முன்தினம் சுகாதார அமைச்சுக்கு வழங்கப்பட்டுள்ளது.
சிங்கப்பூரின் டிம்செக் நிதியம், இந்த அன்பளிப்பை சுகாதார அமைச்சுக்கு வழங்கியுள்ளது.
சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சியிடம் இலங்கையின் தனியார் நிறுவனம் ஒன்றின் பணிப்பாளர் இந்த வென்டிலேட்டர்களைக் கையளித்துள்ளார். (ற-இ)

### மட்டக்களப்பில்...!

மட்டக்களப்பு, நவ.7
மட்டக்களப்பு செங்கலடியில் ஒருவருக்கும், வாழைச்சேனையில் ஒருவருக்கும், ஏறாவூரில் ஒருவருக்கும் கொரோனாத் தொற்று நேற்று மதியம் உறுதி செய்யப்பட்டுள்ளது!
மட்டக்களப்பு மாவட்டத்தில் இதுவரை 47 பேர் கொரோனாவால் தொற்றுக்குள்ளாகியுள்ளனர். (ந-இ)

### கல்பிட்டி வைத்தியசாலை ஊழியருக்கு..!

கல்பிட்டி ஆதார வைத்தியசாலையின் ஊழியர் ஒருவருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என சுகாதாரப் பிரிவினர் தெரிவித்தனர்.
இதன் காரணமாக குறித்த வைத்தியசாலையில் தாதி உள்ளிட்ட இருவர் தனிமைப்படுத்தப்பட்டு உள்ளனர். (ந-இ)

### கல்முனையில்...

அம்பாறை, நவ.7
கல்முனை - இறக்காமம் பிரதேசத்தில் மேலும் இரு கொரோனாத் தொற்றாளர்கள் இனங் காணப்பட்டுள்ளனர் என்று கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி டாக்டர் ஜீ. சுகுணன் தெரிவித்துள்ளார்.
கொழும்பு புத்தகக் கடை ஒன்றில் பணிபுரிந்து மீண்டும் தனது இல்லத்துக்குத் திரும்பியிருந்த நிலையில், அடையாளப்படுத்தப்பட்ட கொரோனாத் தொற்றாளரின் தந்தைக்கும் சகோதரருக்கும் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர் முடிவுகளின்படி இவர்களுக்கும் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. (ந-இ)



## இன்றைய நாள்

**மேடம்:** உங்களின் நல்ல செயலை சிலர் கேலி பேசுவர். நம்பிக்கையுடன் செயல்படுவது அவசியமாகும். தொழில், வியாபாரம் வளர்ச்சி பெற புதிய யுக்தியை கையாள்வீர்கள். சீரான அளவில் பணவரவு கிடைக்கும்.

**இடபம்:** எதிரான சூழ்நிலை நிலவினாலும் மனசாட்சியுடன் நடந்து கொள்வீர்கள். தொழில், வியாபாரத்தில் வருகிற குளறுபடியை மாற்று உபாயத்தால் சரிசெய்வது நல்லது.

**மிதுனம்:** நண்பரிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். பணிகளில் நம்பிக்கையுடன் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி திட்டமிட்ட இலக்கை எட்டும்.

**கடகம்:** பேச்சு, செயலில் தயக்கம் ஏற்படலாம். தொழிலில் உற்பத்தி, விற்பனை சீரான அளவில் இருக்கும். அதிக நிபந்தனையுடன் கடன் பெற வேண்டாம். விஷப்பிராணிகளிடம் இருந்து விலகுவது நல்லது.

**சிம்மம்:** மதிநுட்பத்துடன் செயல்படுவீர்கள். முயற்சிகளுக்கான பலன் திருப்திகரமாக கிடைக்கும். தொழில், வியாபாரம் செழிக்கும். சமூகத்தில் தனி அந்தஸ்தை பெறுவீர்கள். பணம் கொடுக்கல், வாங்கல் சீராகும்.

**கன்னி:** சொந்த விஷயங்களை பற்றி பிறரிடம் சொல்ல வேண்டாம். தெய்வ அனுகூலத்தால் நினைத்த செயல்கள் அனைத்தும் நிறைவேறும். சிக்கனமாகச் செலவு செய்வீர்கள்.

**துலாம்:** சிலருக்கு சரியான நேரத்தில் உதவிசெய்வீர்கள். தொழில், வியாபாரம் செழிக்கத் தேவையான மாற்றத்தை செய்வது நல்லது. பணவரவுடன் நன்மையும் அதிகரிக்கும்.

**விருச்சிகம்:** செயல்கள் அனைத்திலும் நேர்த்தி காணப்படும். குடும்பத்தினரால் பாராட்டும் பெறுவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியில் முன்னேற்றகரமான பலன் உண்டு.

**தனுசு:** வெளிவட்டார தொடர்பு தொந்தரவு தரலாம். எந்தச் செயலிலும் பொறுமை அவசியம். தொழில், வியாபாரத்தில் அளவான மூலதனம் பயனளிக்கும். பணவரவை விட செலவு அதிகரிக்கும்.

**மகரம்:** மாற்றுக் கருத்து உடையவரிடம் விலகுவது நல்லது. தொழில், வியாபாரம் செழிக்க கிடைக்கும் வாய்ப்பை சரியாக பயன்படுத்துவீர்கள். சிக்கனம் சிரமத்தை தவிர்க்க உதவும்.

**கும்பம்:** செயல்களில் இரக்க குணம் வெளிப்படும். பிறருக்கு உதவுவதை விருப்பமாகக் கொள்வீர்கள். உபரி வருமானம் கிடைக்கும்.

**மீனம்:** புதியவர்களின் நட்பு கிடைக்கும். தாமதமான பணிகளை ஆர்வமுடன் நிறைவேற்றுவீர்கள். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சிப் பணி திட்டமிட்டபடி நிறைவேறும்.

# அதிக விலைக்கு அரிசி விற்பவர்கள் கைதாவர்

கொழும்பு, நவ.7

அரிசி வகைகளின் அதிகபட்ச விலைகளை மீறி விற்பனை செய்வோருக்கு எதிராகக் கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

அரிசி வகைகளுக்கான அதிகபட்ச விலைகள் நிர்ணயிக்கப்பட்டு, வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது. வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள விலைகளை மீறி அரிசி வகைகள் விற்பனை செய்யப்பட்டால் நுகர்வோர் விவகார ஆணையகத்தின் அதிகாரிகள் ஊடாக அவர்கள் கைதுசெய்யப்படுவார்கள் என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார். (எ-இ)

# உயிரை விடத் தேவையில்லை பதவியை விட்டாலே பேருதவி!

*சுகாதார அமைச்சரை கிண்டலடிக்கும் மங்கள*



கொழும்பு, நவ.7

கொரோனா வைரஸ் பரவலால் ஏற்பட்டிருக்கும் நெருக்கடியை சுகாதார அமைச்சரால் கையாள முடியா விட்டால், அவர் பதவி விலகவேண்டும். மாறாக தனது உயிரைத் தியாகமாக வழங்குவதற்குத் தயாராக இருப்பதாகக் கூறத்தேவையில்லை என்று முன்னாள் நிதியமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக அண்மையில் சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி மத நம்பிக்கையின் அடிப்படையில் மேற்கொண்ட செயற்பாடு பல்வேறு தரப்பினராலும் வெகுவாக விமர்சிக்கப்பட்டது.

இது குறித்து அவர் கடந்த செவ்வாய்க்கிழமை நாடாளுமன்றத்தில் விளக்கமளித்தார்.

இதன்போது தனது உயிரைத் தியாகம் செய்வதனூடாக கொரோனா வைரஸை இல்லாதொழிக்க முடியுமென்றால், அதற்கும் தயாராக இருப்பதாகக் குறிப்பிட்டார். இந்தக் கருத்தை அடிப்படையாகக் கொண்டே மங்கள சமரவீர தனது ருவிட்டர் பதிவில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். (ற-இ)

## தனிமையை முடித்த 43 பேர் வீடுகளுக்கு

கொழும்பு, நவ.7

தனியார் விடுதிகளில் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டிருந்த 43 பேர் நேற்று தமது தனிமைப்படுத்தல் காலத்தை நிறைவுசெய்து வீடுகளுக்கு திரும்பியுள்ளனர். இதுவரை தனிமைப்படுத்தல் காலத்தை நிறைவு செய்து வீடு திரும்பியவர்களின் மொத்த எண்ணிக்கை 63 ஆயிரத்து 644 ஆக அதிகரித்துள்ளது. (ந-இ)



## தலத்து ஓயாவில் கடைகள் பூட்டு


கொழும்பு, நவ.7

கண்டி, தலாத்து ஓயா நகரை அண்மித்த பிரதேசங்களில் கொரோனாத் தொற்றாளர்கள் அதிகரித்துவருவதால், பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களின் வேண்டுகோளுக்கு அமைய அங்குள்ள வர்த்தக நிலையங்களை இன்று முதல் மூன்று தினங்களுக்கு மூடுவதற்கு, நகரின் வர்த்தக சங்கம் தீர்மானித்துள்ளது.

முச்சக்கர வண்டிச் சாரதிகள் சங்கம், தனியார் வாகனச் சாரதிகள் சங்கத்தின் இணக்கத்துடனேயே, நகரை மூன்று தினங்களுக்கு மூடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று வர்த்தக சங்கத்தின் தலைவர் சுசில் வேதகே தெரிவித்தார். (ப-இ)

# சுபீட்சமான ஆட்சி இன்று தோல்வியைத் தழுவியுள்ளது

*ஐ.ம.சக்தியின் எம்.பி முஜிபுர் ரஹ்மான் தெரிவிப்பு*



கொழும்பு, நவ.7

இலங்கையில் கொரோனா அபாயத்தால் சுபீட்சமான ஆட்சி இன்று தோல்வியையே எதிர்நோக்கி வருகின்றது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்துள்ளார். கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

கொரோனா வைரஸ் பரவல் காரணமாக ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளதால், சுயதொழிலாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். தற்போது வாழ்க்கைச் செலவும் அதிகரித்துள்ளது.

இந்நிலையில் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச, தான் வரும்போது வீதியோரங்களில் காணப்படும் விற்பனை நிலையங்கள் அனைத்தும் மூடப்பட்டிருந்தன என ஊடகங்களின் முன்னிலையில் தெரிவித்திருந்தார்.

ஊரடங்கு காரணமாகவே அவை மூடப்பட்டுள்ளன என்பதை அவர் மறந்து விட்டார் போல, கொழும்புக்குள் நாளாந்தம் ஊதியம் பெற்று வாழ்பவர்களே அதிகளவில் இருக்கின்றனர்.

எனவே ஊரடங்குச் சட்டம் காரணமாக இவர்களது அனைத்து தொழில் நடவடிக்கைகளும் முடக்கப்பட்டுள்ளன. அதற்கமைய ஜனாதிபதி இவர்கள் தொடர்பில் ஊடகங்களின் முன்னிலையில் கருத்துரைப்பதை விடுத்து, இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு நிவாரணங்களை வழங்க வேண்டும். சுபீட்சமான ஆட்சி இன்று தோல்வியை எதிர்நோக்கி வருகின்றது - என்றார். (ற-இ)

தேசிய அடையாள அட்டை

# தகவல்களை உறுதிப்படுத்த நிறுவனங்களுக்கு புதிய வழி

கொழும்பு, நவ. 7
தேசிய அடையாள அட்டையின் நம் பகத் தன்மையை உறுதிப்படுத்த வங்கிகள் உள்ளிட்ட அரச நிறுவனங்கள் இணையம் ஊடாக சான்றிதழைப் பெற்றுக்கொள்வதற்கான வேலைத் திட்டத்தை அறிமுகப்படுத்த ஆள்களைப் பதிவு செய்யும் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.
விரைவில் வெளியிடப்படவுள்ள இலத்திரனியல் தேசிய அடையாள அட்டை செயற்பாட்டுக்கு இந்தத் திட்டத்தை இடைக்காலத் தீர்வாக அறிமுகப்படுத்தியுள்ளோம் என திணைக்களத்தின் ஆணையாளர் வியானி குணதிலக்க தெரிவித்துள்ளார்.
இலங்கையில் உள்ள வங்கிகள், நிதி நிறுவனங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், அரசமைப்பு சபை, அரசுக்கு இணைக்கப்பட்டுள்ள நிறுவனங்கள் தமது தேவைகளைப் பூர்த்திசெய்யும்போது வாடிக்கையாளரின் விருப்பப்படி மட்



டுமே அடையாள அட்டைத்தகவல்களை சான்றளிக்க சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.
எனினும் வாடிக்கையாளர்களின் தகவல்களை சான்றளிப்பதற்காக மேற்படி நிறுவனங்களால் ஆள்பதிவு திணைக்களங்களுடன் முழுமையான ஒப்பந்தம் மேற்கொள்ள வேண்டும்.
தனிப்பட்ட அடையாளத்தை நம்பகத்தன்மையுடன் சரி பார்க்கவும், தேசிய அடையாள அட்டையை தவறான முறையில் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் பல்வேறு மோசடிகளை தடுப்பதற்காகவும் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என ஆணையாளர் மேலும் தெரிவித்துள்ளார். (ஒ-இ)

# முல்லை மீனவர்களை கண்காணிக்க பணிப்பு

முல்லைத்தீவு, நவ. 7
இந்திய மீனவர்களுடன் ஆழ்கடலில் வியாபார மற்றும் இதர தொடர்புகளைப் பேணுபவர்கள் தொடர்பில் கவனம் செலுத்துமாறு கடற்படையினர் மற்றும் கடற்றொழிலாளர் சமாசம் என்பவற்றுக்கு முல்லைத்தீவு மாவட்டச் செயலர் க.விமலநாதன் உத்தரவிட்டுள்ளார்.
முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கொரோனா அவசர நிலை தொடர்பான கலந்துரையாடலிலேயே இவ்வாறு உத்தரவிட்டுள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
ஆழ்கடலில் இங்குள்ள மீனவர்கள் சிலர் இந்திய மீனவர்களுடன் தொடர்பைப் பேணுவதாகவும், கஞ்சா போன்ற போதைவஸ்த்து மற்றும் கணவாய், உணவுப் பொருள்கள் உள்ளிட்ட பரிமாற்றங்கள் இடம்பெறுவதாகவும் தகவல்கள் கிடைக்கின்றன.
இந்திய மீனவர்களுடன் தொடர்பைப் பேணுபவர்கள் குறித்து கவனத்துடன் செயற்படவேண்டும்.
இந்தியாவைப் பொறுத்த வரையில், அங்கு கொரோனாத் தொற்று கட்டுப்படுத்தப்படவில்லை. இந்திய மீனவர்களுடன் தொடர்பைப் பேணுபவர்கள் ஊடாகவும் இங்கு தொற்றுக்கள் பரவக்கூடிய வாய்ப்புக்கள் காணப்படுகின்றன.
ஆகவே அவ்வாறான வர்களை இனங்கண்டு தனிமைப்படுத்தவும், அவர்களுக்கு எதிராக உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவும், முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர் சமாசம் மற்றும் கடற்படையினர் கூடுதல் கவனத்துடன் செயற்பட வேண்டும் எனத் தெரிவித்தார். (ஒ-246)

# மீனவர் பிரச்சினையில் அரசியல் வேண்டாமே!

சாள்ஸ் நிர்மலநாதன் கோரிக்கை



**முல்லைத்தீவு, நவ. 7**
**கடலட்டை, சங்கு பிடிப்பதை வடக்கு மாகாண மீனவர்களுக்கு மாத்திரம் அரசு தடைசெய்துள்ளதால் மீனவக் குடும்பங்கள் பாதிப்படைந்துள்ளன. மீனவர்கள் பிரச்சனையில் அரசியல் கண்கொண்டு பார்க்காதீர்கள் என்று தெரிவித்தார் வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தார்.
இலங்கையில் கடலட்டை, சங்கு பிடிப்பதற்கு விதிக்கப்பட்டிருந்த தடை தற்போது நீக்கப்பட்டுள்ளது. எனினும் மன்னார், முல்லைத்தீவு கடற்பகுதிகளில் இந்தத் தடை தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இது பாரபட்சமான செயற்பாடாகும். இதனால் எமது மக்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது.
இந்திய படகுகள் இலங்கை எல்லைக்குள் குறிப்பாக வடக்கு எல்லைக்குள் வருவதால்தான் இந்தக் கட்டுப்பாடுகள் என்றால், அவ்வாறு இந்தியப் படகுகளை வரவிடாது தடுக்க வேண்டுமேத விர வடமாகாண மக்களின் வாழ்வாதாரத்தை முடக்குவது பொருத்தமற்ற செயற்பாடாகும்.
வடக்கு மாகாணத்தைச் சேர்ந்தவர் கடற்தொழில் அமைச்சராக உள்ள நிலையிலேயே இவ்வாறான செயற்பாடுகள் அரங்கேறுகின்றன - என்றார். (ம-213)

# அஞ்சல் அலுவலகங்கள் ஊடாக வீடுகளுக்கு கிளினிக் மருந்துகள்


சாவகச்சேரி, நவ. 7
சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் நடாத்தப்படும் கிளினிக்குகளில் சிகிச்சை பெறுவோருக்கான மருந்துகள் நாளைமறுதினம் தொடக்கம் அஞ்சல் அலுவலகங்கள் ஊடாக அனுப்பி வைக்கப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
தற்போதைய கொரோனாத் தொற்று நிலை காரணமாக கிளினிக்குகளுக்கு நோயாளர்கள் வருகை தரவேண்டாமெனவும், அவசர தேவைகள் இருப்பின் மட்டும் மருத்துவமனை வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெறுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது.
மருந்துகள் கிடைக்காவிடின் மருத்துவமனையின் 021 227 1150 மற்றும் 021 227 0932 ஆகிய தொலைபேசிகளில் காலை 8 மணி தொடக்கம் மாலை 4 மணிவரை தொடர்புகொள்ளுமாறும் மருத்துவமனை பொறுப்பதிகாரி திருமதி டயாழினி மகேந்திரன் அறிவித்துள்ளார். (ம-9)

# ஜனாஸாக்களை வைத்து அரசியல் செய்யவில்லை

உலாமா கட்சித் தலைவர் அரசுக்கு ஆதரவுக் குரல்

கொழும்பு, நவ. 7
கொரோனா பெருந்தொற்றால் உயிரிழக்கும் முஸ்லிம்களின் ஜனாஸாக்களை வைத்து, இந்த அரசு அரசியல் செய்யவில்லை. ஆனால் தம் நிலைப்பாட்டைத் தெரிவிக்கவும் அரசு தவறிவிட்டது என்று தெரிவித்தார் உலமா கட்சித்தலைவர் முபாறக் அப்துல் மஜீட்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
கொரோனா இறப்புக்கள் சம்பந்தமாக ஆராயும் அரச ஆதரவு முஸ்லிம் அரசியல்வாதிகளைக் கொண்ட ஆலோசனைக் கூட்டத்தை பிரதமர் நேரடியாக அல்லது ஒன்லைனில் கூட்டி ஆலோசிக்க வேண்டும். கொரோனாத் தொற்றுக்கு இலக்காகி அல்லது சந்தேகத்தின் பேரில் காலமான முஸ்லிம் ஜனாஸாக்களை எரித்த விடயத்தில் இந்த அரசாங்கம் அரசியல் செய்யவில்லை என்பது உண்மை. ஆனாலும் இதனை அரசியலாக்கி முஸ்லிம்களை தமக்கு நெருக்கமாக்குவதற்கும் இந்த அரசு தவறிவிட்டது என்றார். (ம-இ)

# கொரோனாத் தொற்று கேகாலையில் தீவிரம்



கொழும்பு, நவ. 7
கேகாலை மாவட்டத்தில் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் தீவிரமாக அதிகரித்து வருகின்றது. மாவட்டத்தின் பிரதான நகரங்களை மையப்படுத்திய பிரதேச செயலகங்களில் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டு வருகின்றனர்.
தெரணியகலை வித்தியாலய மாவத்தை, உடபொல, மாலிபொடதலாவ பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் தொற்றாளர்களாக உறுதிசெய்யப்பட்டுள்ளனர். இந்த தொற்றுகள் பேலியகொட மீன்சந்தை கொத்தணி பரவலோடு சம்பந்தப்பட்டவை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-இ)

# சாவகச்சேரி பரிசோதனை எவருக்கும் தொற்றில்லை

சாவகச்சேரி, நவ. 7
சாவகச்சேரியில் அண்மையில் மாதிரிகள் பெறப்பட்ட நால்வருக்கும் கொரோனாத் தொற்று இல்லை என்று சாவகச்சேரி சுகாதாரத் திணைக்களம் அறிக்கை அனுப்பியுள்ளது.
அண்மையில் கொழும்பு சென்று திரும்பிய வாகனச் சாரதி, கொழும்பு வர்த்தக நிலையத்தில் பணிபுரியும் ஒருவர், தென்பகுதியில் உள்ள தமது சொந்த இடங்களுக்குச் சென்று திரும்பிய சாவகச்சேரி மருத்துவமனை தாதிய உத்தியோகத்தர்கள் இருவர் ஆகியோருக்கு சுகாதார திணைக்களத்தால் பி.சி.ஆர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. இந்த ஆய்விலேயே அவர்கள் எவருக்கும் கொரோனாத் தொற்று இல்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-9)

# கதிர்காமத்துக்கு யாத்திரை 120 பேர் தனிமைப்படுத்தல்



கொழும்பு, நவ. 7
கொழும்பிலிருந்து கதிர்காமத்துக்கு சுற்றுலா சென்ற 120 பேரை கதிர்காமம் பொது சுகாதாரப் பரிசோதகர்கள் நேற்றுமுதல் அடுத்த 14 நாள்களுக்கு தனிமைப்படுத்தியுள்ளனர்.
கதிர்காமத்துக்கு சுற்றுலாசென்ற மேற்படி 120 பேரும், அவர்கள் தங்கியிருந்த விடுதிகளிலேயே தனிமைப்படுத்தப்பட்டனர். கொழும்பில் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில் இவர்கள் எவ்வாறு யாத்திரை சென்றனர் என்பது தொடர்பிலும் விசாரணைகள் இடம்பெறுகின்றன. (ம-இ)

# வீதியோர வியாபார நடவடிக்கை வவுனியாவில் அடியோடு தகர்ப்பு

## தளபாடங்களையும் அள்ளியது நகரசபை



வவுனியா, நவ.7

**வவுனியா நகரப் பகுதியில் வீதியோர வியாபார நடவடிக்கைகளுக்குத் தடை விதித்துள்ள வவுனியா நகர சபை அந்த உத்தரவை மீறி பொருள்களை விற்பனை செய்துவரும் வியாபாரிகளுடைய தளபாடங்களையும், வீதிகளிலிருந்து ஏற்றிச் சென்றது.**

கொவிட்-19 தாக்கத்தைக் கருத்தில் கொண்டும், வடக்கு மாகாண ஆளுநரின் உத்தரவுக்கமையவும் வவுனியா, நகரசபையால் இந்த நடவடிக்கை நேற்று முன்னெடுக்கப்பட்டது.

வவுனியா நகரப் பகுதியில் வீதியோர வியாபார நடவடிக்கைகளுக்குத் தடைவிதிப்பதாக நகர சபையால் கடந்த இரு தினங்களாக அறிவிக்கப்பட்ட நிலையில், அதனை மீறி வியாபார நடவடிக்கையில் ஈடுபட்டவர்களின் தளபாடப் பொருள்களே நேற்று பறிமுதல் செய்யப்பட்டன.

அத்துடன் வீதியோரங்களில் மரக்கறி வகைகள், பான்சிப் பொருள்கள், புடைவைகள் உள்ளிட்ட வர்த்தக நடவடிக்கைகளுக்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது. (ப-18)

சாதாரண தர மாணவர்களின்

# பூர்த்தியான பாடத்திட்ட விவரங்கள் திரட்டல்

கொழும்பு, நவ. 7

கல்வி பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான பாடத்திட்டங்கள் எது வரையில் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன என்பது தொடர்பில் அறிக்கையொன்றைக் கோருவதற்கு கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

வலயக் கல்விப் பணிப்பாளர்கள் ஊடாக அறிக்கையைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என கல்வி அமைச்சின் செயலர் பேராசிரியர் கபில பெரேரா தெரிவித்துள்ளார்.

கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையில், ஒவ்வொரு பாடத்திட்டத்தையும் பூர்த்தி செய்துள்ள வீதம் மற்றும் பாடத்திட்டத்தை பூர்த்தி செய்வதற்கு எடுக்கப்பட்டுள்ள திட்டங்கள் குறித்தும் மீளாய்வு செய்யப்படவுள்ளன. (ஒ-இ)

# யாழில் 3 நாள்கள் கிளைமத்தோன்

யாழ்ப்பாணம், நவ.7

இலங்கையில் முதன்முதலாக 2019ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்ட காலநிலை மாற்றத்திற்கான தீர்வுகளை வலியுறுத்திய "கிளைமத்தோன்" நிகழ்வு 2 ஆவது வருடமாக இம்முறையும் வரும் 13, 14, 15ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ளது.

உலகப் பொது முடக்கம் காரணமாக இந்த வருட நிகழ்வுகள் முழுமையாக இணையவழி ஊடாகவே ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன. 2030ஆம் ஆண்டளவில் காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ளத்தக்க நிலைபேறான யாழ்ப்பாண மாநகரை உருவாக்குவதே இதன் நோக்கமாகும்.

13ஆம் திகதிகாலை 8.30 மணி தொடக்கம் 11.30 மணிவரை கிளைமத்தோன் நிகழ்வின் ஆரம்ப நிகழ்வுடன் கூடிய அறிமுக நிகழ்வு இடம்பெறும். 14ஆம் திகதி காலை 8.30 மணிக்கு சூழலியலாளர் பொ. ஐங்கரநேசன் மற்றும் 15ஆம் திகதி காலை 8.30 மணிக்கு ரியாஸ் அகமட் (விரிவுரையாளர் கிழக்கு பல்கலைக்கழகம்) ஆகியோர் சிறப்புப் பேச்சாளர்களாகக் கலந்துகொள்வர். 14ஆம் திகதி மாலை 4-7 மணி வரை கலை நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. 15ஆம் திகதி காலை 10 மணி முதல் துறைசார் வல்லுநர்கள் கலந்து கொள்ளும் சிறப்புக் கலந்தாய்வும், மாலை 4 மணி முதல் 7 மணி வரை பரிசில்கள் வழங்கல் நிகழ்வும் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் 817 5484 7355 எனும் இலக்கம் மூலம் செயலி ஊடாக இணைந்து கொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ப-222)

# நிர்வாகிகள் தெரிவு

பருத்தித்துறை, நவ.7

பருத்தித்துறை வராத்துப்பளை வளர்மதி சனசமூக நிலையத்தின் நடப்பு வருட நிர்வாகிகள் தெரிவு அண்மையில் நிலைய மண்டபத்தில் பருத்தித்துறை பிரதேச சனசமூக அபிவிருத்தி அலுவலர் திருமதி ஜோ. பரமேஸ்வரியின் பங்குபற்றலுடன் நடைபெற்றது.

நடப்பு வருட நிர்வாகிகள் தெரிவில் தலைவராக அ. சுதாகரனும், உப தலைவராக வி. பிரியங்காவும், செயலராக பெ. பத்மநாதனும், உதவிச் செயலராக ஜோ.செபஸ்ரியனும், பொருளாளராக தி. நெவில்சனும், நிர்வாக உறுப்பினர்களாக ம. நவயுகன், கு. சுபாஜினி, இ. பரமேஸ்வரி, இ. மதுரா, யோ.தர்சன், வி.பிரதீபன், கணக்காய்வாளராக செ. ஜெகமலர் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (ப-9)

# புலிகளின் ஆயுதங்களைத் தேடி கல்லடியில் பொலிஸ் அகழ்வு

திருகோணமலை,நவ.7

திருகோணமலை சேருநுவர பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கல்லடிப் பகுதியில் விடுதலைப் புலிகளால் புதைக்கப்பட்ட ஆயுதங்கள் இருப்பதாகத் தெரிவித்து நேற்று முன்தினம் அகழ்வுப்பணி மேற்கொள்ளப்பட்டது.

சேருநுவர பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் மூதூர் நீதவான் நீதிமன்ற நீதிபதி எம்.எஸ்.எம்.சம்சுதீன் முன்னிலையில் பெக்கோ இயந்திரம் மூலம் அகழ்வுப் பணி முன்னெடுக்கப்பட்டது.

அங்கிருந்து ஆயுதங்கள் ஏதும் மீட்கப்படாததால் குறித்த இடம் மூடப்பட்டு அகழ்வுப்பணி நிறுத்தப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

அகழ்வு மேற்கொள்ளப்பட்ட இடத்தில் தற்போது தப்பத்த ரஜமஹா விகாரை இருப்பதோடு போர்க் காலத்தில் விடுதலைப் புலிகளின் படைமுகாம் இருந்ததாக தெரிவிக்கப்படுகிறது. (ஐ-இ)

# சாவகச்சேரி நகரசபையின் பாதீடு மக்கள் பார்வைக்கு

சாவகச்சேரி, நவ.7

சாவகச்சேரி நகரசபையின் 2021 ஆம் ஆண்டுக்கான உத்தேச வரவு செலவுத் திட்ட வரைவுகள் பொதுமக்களின் பார்வைக்காக நகரசபை அலுவலகத்திலும், சாவகச்சேரி, நுணாவில், மீசாலை ஆகிய பொது நூலகங்களிலும் வைக்கப்பட்டுள்ளன.

இந்த வரவு செலவுத் திட்டத்தின் பிரகாரம் அடுத்த வருடத்துக்கான மொத்த வருமானமாக 12 கோடியே 91 லட்சத்து 51 ஆயிரத்து 277 ரூபாவும் மொத்த செலவீனமாக. 12 கோடியே 91 லட்சத்து. 47 ஆயிரத்து 363 ரூபாவும் மிகையாக 3 ஆயிரத்து 914 ரூபாவுமென மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

இந்தத்தொகையில் நகரசபை எல்லைக்குள் 17 வீதிகள் சீரமைக்க தலா 15 லட்சம்ரூபா வீதம் 2 கோடியே 55 லட்சம் ரூபாவும், சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டியில் கழிவுநீர் சுத்திகரிப்புத் தொகுதியை அமைக்க 30 லட்சம் ரூபாவும், திண்மக்கழிவு முகாமைத்துவப் பாதுகாப்பு அலுவலருக்கான கொட்டகை அமைக்க 15 லட்சம் ரூபாவுமாக 45 லட்சம் ரூபாவும், சிறுவர் பூங்கா அமைக்க காணி கொள்வனவு மற்றும் எல்லையிடலுக்கு 40 லட்சம் ரூபாவும், பிரதேச அபிவிருத்தி உதவித் திட்டங்களை மேற்கொள்ள 80 லட்சம் ரூபாவும் சாவகச்சேரி நவீனசந்தையில் வர்த்தகர்களுக்கான மலசலகூடம் அமைக்க பத்துலட்சம் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது. (ப-9)

# போலித் தகவல்களை பரப்பினால் தண்டனை

## பொலிஸார் அறிவிப்பு

கொழும்பு, நவ.7

தனிமைப்படுத்தல் உத்தரவை மீறிச் செயற்படுபவர்கள் மற்றும் உண்மைத் தகவல்களை மறைத்து போலியான தகவல்களை வழங்கும் நபர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர், பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

தற்போதைய நிலைமையின் அடிப்படையில் போலியான தகவல்களை வழங்குவது குற்றமாகும், இவ்வாறான குற்றத்துக்குத் தண்டனையாக குற்றவாளியை 5 வருடம் விளக்க மறியலில் வைக்க முடியும் எனவும் நேற்று ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளார். (ப-இ)


# வாகனங்களை மறித்து பொலிஸார் சோதனை

மட்டக்களப்பு, நவ.7

மட்டக்களப்பு வாழைச்சேனை பொலிஸ் பிரிவில் தனிமைப்படுத்தல் ஊரடங்கு அமுலில் உள்ளதையடுத்து முதன்மை வீதியின் ஊடாக பயணம் செய்யும் வாகனங்களை மறித்து பொலிஸார் சோதனை செய்து வருகின்றனர்.

இதன்போது அனுமதி பெறாமல் செல்பவர்கள், முகக்கவசம் அணியாது செல்பவர்கள் பொலிஸாரால் எச்சரிக்கை செய்யப்பட்டனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் இதுவரையில் 47 கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என சுகாதார திணைக்கள தகவல்கள் தெரிவிக்கின்றன.




(ஐ-150)

## தொற்றிலிருந்து விடுபட்டோருக்கும் தனிமை நிலையம்

கொழும்பு, நவ.7
சப்ரகமுவ மாகாணத்தில் கொரோனா வில் இருந்து குணமடைந்தோரைத் தொடர்ந்து 14 நாள்கள் தனிமைப்படுத்தி வைப்பதற்கு புதிய தனிமைப்படுத்தல் நிலையம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று சப்ரகமுவ மாகாண ஆளுநர் அறிவித்துள்ளார்.
கொரோனாத் தொற்றாளர்கள் குணமடைந்த பின் அவர்கள் மேலும் 14 நாள்கள் தனிமைப்படுத்தப்பட வேண்டும் என்று சுகாதாரப் பிரிவின் மூலம் அறிவுறுத்தப்படுகிறது. இதற்கமைய குணமடைந்த தொற்றாளர்களை மேலும் 14 நாள்கள் அவர்களின் வீடுகளில் தனிமைப்படுத்தாது அதற்கென இரத்தினபுரி புஸ்சல்ல பயிற்சி நிலையம், தனிமைப்படுத்தல் நிலையமாக மாற்றப்பட்டுள்ளது என ஆளுநர் தெரிவித்தார். (ஐ-இ)

## மட்டக்களப்பில் 5,764 பேர் தனிமைப்படுத்தலில்

மட்டக்களப்பு, நவ.7
மட்டக்களப்பு மாவட்டத்தில் 2 ஆயிரத்து 244 குடும்பங்களைச் சேர்ந்த 5 ஆயிரத்து 764 பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் என மாவட்டச் செயலர் கே. கருணாகரன் தெரிவித்துள்ளார்.
கொரோனா நோயாளர்களுடனான நேரடித் தொடர்புடையவர்கள், அவர்களின் குடும்ப அங்கத்தவர்கள் மற்றும் வெளிமாவட்டங்களில் இருந்து வருகைதந்தவர்கள் போன்றோர் இவ்வாறு தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ஐ-இ)



## மரக்கடத்தல் முறியடிப்பு; சந்தேகத்தில் ஒருவர் கைது

வவுனியா, நவ.7
சட்டவிரோதமான முறையில் முதிரை மரக்குற்றிகளை கடத்திச் சென்ற குற்றச்சாட்டில் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.
வவுனியா கருங்காலிக்குளம் பகுதியில் வைத்து நேற்றுமுன்தினம் விசேட அதிரடிப்படையினரால் சந்தேக நபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.
அதிரடிப்படையினருக்குக் கிடைத்த இரகசிய தகவலையடுத்து அப்பகுதிக்கு சென்ற விசேட அதிரடிப் படையினர் மற்றும் வவுனியா வனவள அதிகாரிகளால் இக் கடத்தல் சம்பவம் முறியடிக்கப்பட்டுள்ளது.
இதன்போது பல லட்சம் ரூபா பெறுமதியான 8 முதிரை மரக்குற்றிகள் மற்றும் கடத்தலுக்கு பயன்படுத்திய ஜீப் வாகனம் என்பன கைப்பற்றப்பட்டன. (ஐ-ரி3)

# கொரோனாவின் அடுத்த அலை மிகப் பயங்கரமாக இருக்குமாம்


*எதிர்வு கூறுகிறார் ரணில்*

**கொழும்பு, நவ.7**
**நாட்டில் தற்போது பரவி வரும் கொரோனா வைரஸ் அலையானது அடுத்த ஒரு மாதம் அல்லது ஒன்றரை மாதத்துக்குள் முடிவுக்கு வரும். அதன் பின்னர் வரப்போகும் அடுத்த அலை மிகப் பயங்கரமானதாக இருக்கும் என்று முன்னாள் பிரதமர் ரணில் விக்ரமசிங்க எதிர்வு கூறியுள்ளார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;
கொரோனா வைரஸின் மூன்றாம் அலையானது பெரும்பாலும் டிசெம்பர் மாதத்திற்குள் முடிவுக்கு வரும். வைரஸ் பரவலின் மூன்றாவது அலையானது உலகளவில் உருவாகும். அது எப்போது இலங்கைக்குள் பரவும் என்பதைக் கூற முடியாது என்றாலும் அது மிகப் பயங்கரமானதாக இருக்கும் என்பதால், முன்கூட்டியே அதற்கு தயாராக இருக்க வேண்டும். நான் தற்போது அரசியலில் இருந்து ஒதுங்கி அமைதியாக இருந்தாலும் இவை தொடர்பான அனைத்தையும் ஆராய்ந்து வருகிறேன். இந்த தருணத்தில் எதிர்காலம் தொடர்பான தெளிவான திட்டங்களுடன் ஆட்சியாளர்கள் செயற்பட வேண்டும் என்றார். (ஐ-இ)

## முகக்கவசம் அணியாவிடில் சட்டப்பிரச்சினையில் சிக்குவீர்

*யாழ். நகரில் பொலிஸார் அறவுறுத்து*



யாழ்ப்பாணம், நவ. 7
யாழ்ப்பாணம் நகரில் முகக்கவசம் அணியாமல் சென்றவர்கள் மீது பொலிஸார் அதிரடி நடவடிக்கையில் நேற்றுமுன்தினம் ஈடுபட்டனர்.
முகக்கவசம் அணியாமல் சென்றவர்கள் மறிக்கப்பட்டு அவர்கள் மீது சட்ட ஏற்பாடுகள் மேற்கொள்ளும் பதிவுகளில் பொலிஸார் ஈடுபட்டனர்.
மக்கள் முகக்கவசம் அணிந்து செல்கின்றனரா என்பதை பொலிஸார் பல்வேறு இடங்களில் நின்று கண்காணிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.
அத்துடன் நகரப் பகுதி வர்த்தக நிலையங்களில் முகக்கவசம் இன்றி பணியாற்றுவோர் தொடர்பிலும் பொலிஸார் கவனம் செலுத்தினர். உரிய சுகாதார நடைமுறை மற்றும் தனியாள் இடைவெளியைப் பின்பற்ற வேண்டும் என்றும் தவறின் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் பொலிஸார் எச்சரித்தனர். (த-17)




## மழை பெய்ய வேண்டி புளியம்பொக்கணையில் அபிஷேகம்

கிளிநொச்சி, நவ. 7
மழை பெய்ய வேண்டி புளியம்பொக்கணை சந்தியில் அமைந்துள்ள செல்வவிநாயகர் கோவிலில் நேற்றுமுன்தினம் முற்பகல் 108 குட பால் அபிஷேகமும் 108 இளநீர் அபிஷேகமும் 1008 குடம் தண்ணீர் அபிஷேகமும் நடைபெற்றது.
கிளிநொச்சி மாவட்ட விவசாயிகளின் நலனைக் கருத்தில் கொண்டு புளியம்பொக்கணை விவசாயிகளும் பெரியகுளம் விவசாயிகளும் இணைந்து இந்த அபிஷேகத்தில் ஈடுபட்டனர்.
விவசாயிகளின் நலன் வேண்டியும் பயிர்களின் சிறந்த விளைச்சல் பெறவேண்டியும் அபிஷேக வழிபாடுகள் நடத்தப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது. (த-113)

## புலம்பெயர் தொழிலாளர்களுக்கான ஒப்பந்தக் கட்டுப்பாடுகளில் தளர்வு

கொழும்பு, நவ. 7
சவூதி அரேபியாவில் உள்ள சுமார் 10 மில்லியன் புலம்பெயர் தொழிலாளர்கள் மீதான சில கடுமையான ஒப்பந்தக் கட்டுப்பாடுகளில் தளர்வு கொண்டுவரப்படவிருப்பதாக அந்த நாடு அறிவித்துள்ளது.
இந்த மாற்றத்தின் மூலம் தனியார் துறை தொழிலாளர்கள் தொழில் வழங்குநரின் ஒப்புதல் இன்றி தமது தொழிலை மாற்றவும் நாட்டை விட்டு வெளியேறவும் புலம்பெயர் தொழிலாளர்கள் அனுமதிக்கப்படவுள்ளனர்.
தொழில் சூழலின் செயல் திறனை மேம்படுத்த மற்றும் அதிகரிக்க முயற்சித் திருப்பதாக சவூதி அரசு குறிப்பிட்டுள்ளது. தற்போது நடைமுறையில் உள்ள 'கபாலா' முறை காரணமாக தொழிலாளர்கள் துஷ்பிரயோகம் மற்றும் சுரண்டல்களால் பாதிக்கப்படுவதாக மனித உரிமைக் குழுக்கள் கூறுகின்றன. இந்த மாற்றத்தை தொழில் செயற்பாட்டாளர்கள் வரவேற்றுள்ளனர். (ம-இ)

## கைதியின் இறப்புத் தொடர்பில் உடனடி விசாரணை வேண்டும்!



கொழும்பு, நவ. 7
சிறைச்சாலை அதிகாரிகளால் தாக்கப்பட்டு உயிரிழந்த தடுப்புக் காவல் கைதியின் மரணம் குறித்து உடனடியாக விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டுமென, சிறைக்கைதிகளின் உரிமைக்காக குரல் கொடுக்கும் இலங்கையின் முன்னணி அமைப்பு ஒன்று, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளது.
தமது முறைப்பாட்டை ஏற்றுக்கொண்டுள்ளதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் விசாரணைப் பிரிவு மின்னஞ்சல் மூலம் அறிவித்துள்ளதாக சிறைக்கைதிகளின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான குழு தெரிவித்துள்ளது.
மொனராகலை சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த சந்தேக நபரான யு.ஜி உபுல் நிலாந்த, கடந்த 3ஆம் திகதி இரு சிறைச்சாலை அதிகாரிகளின் தாக்குதலில் உயிரிழந்தார் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-இ)

# மர நடுகை
## ஒரு நினைவேந்துகை

○ கமலன்

மரங்கள் இறை தந்த வரங்கள் மட்டுமல்ல சமயங்களில் அவையே இறையும் கூட. மர வழிபாடு எவ்வாறு இன்றும் தமிழரிடையே வழக்கிலுள்ளதோ அதேபோன்று மர நடுகையும் ஒரு நினைவேந்துகை ஒரு வேண்டுதல் ஒரு பிரார்த்தனை இரு கைகளை அல்ல ஆயிரம் பல்லாயிரம் இலைக் கரங்களை வானோக்கி ஏந்தும் அழகிய பிரார்த்தனை ஆகும். மனிதராய் பிறந்து வாழ்ந்து மடிவதற்குள் நாளாந்த தேவைகளுக்காய் எண்ணிலடங்கா மரங்களை பயன்படுத்தியிருப்போம், கணக்கற்ற மரங்களை கொன்றுமிருப்போம் எமது அற்ப தேவைகளுக்காக, நாம் இந்த பூமியை விடுத்து நீங்குவதற்குள் அனைவராலும் இயலுமான ஒரு தருமம் மர நடுதலாகும். நீங்கள் மரித்த பின்னும் பன்னெடுங்காலமாக நிலைத்திருக்கும் . உங்களை யாரென்றே அறியாத எவரோ அதிலிருந்து பயனடைவர். நீங்கள் மரித்தும் பயனுற வாழ்வீர்.



உங்கள் அகவை நாட்கள் குழந்தை சனனங்கள் நீத்தார் நினைவேந்தல்களின் போதும் மரக்கன்றுகளை நடுங்கள். உங்கள் உறவுகளுக்கும் கன்றுகளை கொடுங்கள். ஊர்ப்புறங்களில் இப்பொழுதும் அது "மூத்தவன் பிறக்கேக்க வைச்ச கண்டு", "அது இளையதின்ர கலியாணத்துக்கு அடுத்த நாள் வச்சது" என தாத்தா, பாட்டிமார் மரங்களைக் காட்டி உவகையுடன் உரைப்பதை கண்டதில்லையா? கல்யாணமென்றாலே கன்னிக்கால் என்ற பெயரில் முள்முருங்கை அல்லது கல்யாண முருங்கை நட்டு பாலூற்றுவது தமிழ் மரபு. குழந்தை பிறந்தால் தென்னம்பிள்ளை அல்லது பழமரக்கன்று நடுவதும் நம் தமிழ் மரபு. தற்போது மாறும் வாழ்க்கை முறையில் ஒரு சிறுகன்றை நட்டு பராமரிக்க நேரமில்லை என்று அலைகிறோம். மனமகிழ்ச்சியை மனதுள்ளே வைத்து எங்கோ எதையோ தேடி ஓடுகிறோம்.

உங்கள் வசிப்பிடமருகே மரக்கன்றுகளையோ பூ, பழச் செடிகளையோ நட்டு அதை பராமரியுங்கள். அதிகாலை எழுந்து அதற்கு நீரூற்றி வாருங்கள். கொழுப்பைக் கரைக்கும் உடற்பயிற்சிகளும் மருந்து மாத்திரைகளும் உங்களுக்குத் தேவையே வராது. நீங்கள் வைத்த மரக்கன்றுகள் துளிர் விடும் போது நீங்கள் வைத்த பூஞ்செடி முதல் மொட்டவிழ்க்கும் போது உங்களுள் பரவும் பாருங்கள் ஒரு பரவசம். வாழ்ந்து பாருங்கள் மரஞ்செடி கொடிகளுடன். வாழ்தல் எவ்வளவு மகத்துவமானதென்று உணர்வீர்கள். மரக்கன்றுகள் நடுகை செய்ய இது உகந்த காலம். நாளைத் தள்ளிப்போடாமல் இந்த இதமான மாரிகாலத்தில் மரம் நடுங்கள்.

### கன்றினை தெரிவுசெய்தல்

ஆறுமாதம் முதல் வருடம் வரை வயதுடைய மரக்கன்றுகளே மரநடுகைக்கு உகந்தவை. கன்றுகள் நேர்த்தியானவையாகவும், நேரானவையாகவும், நோய்த்தாக்கங்களற்றும் இருத்தல் அவசியம். நாம் நடுகை செய்யவுள்ள மண், சூழல் நிலைமைகளுக்கு பொருத்தமானவையாக, நமது நோக்கங்களுக்கு ஏற்புடையனவாக இருத்தலும் வேண்டும்.

### நடுகைக்குழி அமைத்தல்

கூடுமானவரை 3 மீற்றரிலிருந்து 4 மீற்றர் வரை இடைவெளி விட்டு ஒரு அடி விட்டமும் அல்லது ஒரு அடி நீள அகலமும் உடையதாகவும், இரண்டடி ஆழமுடையதாகவும் குழியினைத் தோண்டுதல் வேண்டும். வெட்டி வெளியெடுக்கப்பட்ட மண்ணைத் மேல் மண் தனியாகவும், அடி மண்ணை தனியாகவும் குழிக்குள் விழாதபடி தள்ளி குவித்தல் வேண்டும் . வெளியெடுத்த மண்ணை சில நாட்கள் அப்படியே விடுதல் நல்லது . அம்மண்ணில் உள்ள கற்கள், உக்காத பொருள்களை அகற்றுதல் வேண்டும். அம் மண்ணுடன் மூன்றில் ஒரு பங்கிற்கு உக்கிய மாட்டெரு சேர்த்தல் வேண்டும்.

### மரநடுகை வேளை

பருவமழைக் காலத்தில் மழை பெய்யும் நாளிலோ அல்லது மேகமூட்டமாக மப்பும், மந்தாரமுமாக உள்ள நாளிலோ கன்றினை நடுகை செய்யலாம். மழைக்குப் பின்னர் நடுகை செய்வது சிறந்தது.

### மரநடுகை முறை

முதலில் நாற்றுபண்ணைகளிலிருந்தோ, நாற்று மேடைகளிலிருந்தோ கன்று பாதிப்புறாத வண்ணம் நடுகையிடத்திற்கு கொண்டுவருதல் வேண்டும். கன்றுகளை கவனமாகவும், அவதானத்துடனும் கையாளுதல் அவசியம். கன்றுள்ள பையினை அடிப்புறமாகப் பிடித்து தூக்குதல் வேண்டும். தண்டினைப் பற்றி தூக்குதல் கூடாது. நடுகையிடத்திற்கு கன்றினை கொண்டு வந்ததும் நேரவிரயமின்றி மேல் மண்ணுடன் கலக்கப்பட்ட மேல் மண்ணை முதலில் குழியுள் இடுதல் வேண்டும்.

சுற்றியுள்ள மண் பிடிப்பு உதிராவண்ணம் பையை அகற்றி மேல்மண் இட்ட குழியில் வைத்தல் வேண்டும். எஞ்சியுள்ள மண்ணை குழியுள் இட்டு வேரைச்சூழவுள்ள பகுதியை இறுக்குதல் வேண்டும். கன்றினை நேராக வைத்தல் வேண்டும். முழுமண்ணையும் குழியிலிட வேண்டும். நீர் விட வசதியாக கன்றைச் சூழவுள்ள பகுதியை பள்ளமாக விடுதல் நலம். சரிவான பகுதி எனில் மழைநீர் சேகரிப்பு குழிகளை கன்றின் முன்னும் பின்னும் பிறைவடிவில் அமைக்கலாம்.

### கவனிக்க வேண்டியவை

. ஈரமண்ணிலிருந்து வேர்கள் வெளித்தெரிந்தாலும், கன்றை சூழவுள்ள மண் உதிர்ந்தாலும் கன்று வாட நேரிடும்.
. கன்றின் வேர்களை ஈரமண்ணில் நன்கு அழுத்தி பொருந்திப்போகச் செய்ய வேண்டும்.
. கன்றினை அதிக ஆழத்திலும் நடுதல் கூடாது . அவ்வாறு நடும்போது கன்று கருகிப்போகலாம்.
. வேர்கள் வெளித்தெரியும்படி இருந்தாலும் அக்கன்று நன்கு வளராது.
. வேர்கள் மடியும்படி நடும்போது அக் கன்று உயிரிழக்க நேரிடும்.
. வளைந்த கன்றுகள் நேராக வளர்தல் கடினம் .
. நடுகைக்கு பின் வரும் முதல் கோடை காலத்தில் கன்றுக்கு நாள்தோறும் நீர்வார்த்தல் வேண்டும்.

---

# வாரம் ஒரு ஆசனம் (04)

● ஸ்ரீ. நதிபரன் (யோகா போதனாசிரியர்)

### 3. அர்த்தச் சக்கராசனம்

இந்த ஆசனமானது பாதிச்சக்கரம் போன்று தோற்றமளிப்பதால் அர்த்த சக்கராசனம் என்று பெயர் வந்தது. இது பாத ஹஸ்தாசனத்தின் மாற்றுப் பயிற்சியாகும்.

**செய்முறை :**

1. உடலை நேர்கோட்டில் வைத்தவாறு (துடாசனத்தில்) நிற்கவும்.


2. இரு மணிக்கட்டுப் பகுதிகளும் ஒன்றுடனொன்று ஒட்டியவாறு இரு உள்ளங்கைகளினாலும் இடுப்பின் பின்புறத்தை அழுத்திப் பிடிக்கவும். அதாவது இரு சிறுநீரகங்கள் அமைந்துள்ள நாரிப்பகுதியை அழுத்தியவாறு இருக்க வேண்டும்.


3. பின்னர், மூச்சை உள்ளிழுத்தவாறு இடுப்பிலிருந்து பின்புறம் நன்றாக வளைந்து, கழுத்தையும் நன்றாக வளைத்து முகமானது பின்நோக்கிப் பார்த்தபடி இருக்கவும். இந்த நிலையில் சாதாரண சுவாசம் கொள்ளவும்.

4. பின்னர் மூச்சை வெளிவிட்டபடி நேரான நிலைக்கு வந்து உள்ளங்கைகளை விடுவித்து ஆரம்பநிலைக்கு வரவும்.

**பயன்கள் :**

உடம்பின் முன்புறத் தசைகள், கெண்டைக்கால் தசைகள், இடுப்பு, விலா பகுதித் தசைகள் முறுக்கேறும். முதுகுத் தண்டு வடம் வளைந்து கொடுக்கும் தன்மை பெறுவதால் வீரியத் தன்மையும் வலிமையும் பெறுகின்றது. சுவாச உறுப்புக்கள் சீரடையும். மேலும் ஆஸ்மா, முதுகுவலி, நாரி வலி, கழுத்து வலி, தசைப்பிடிப்புக்கள் மற்றும் சிறுநீரகம் சம்பந்தமான அனைத்து நோய்களும் குணமாகும். ஆண்மை மற்றும் பெண்மை நீடித்து நிலைக்கும். பெண்களுக்கு ஏற்படும் மாதவிடாய் கோளாறுகள் மற்றும் கர்ப்ப ரீதியான உடலியல் செயற்பாட்டு நோய்களுக்கு சிறந்த ஆசனம். மார்புக்கூடு விரியும். மார்புச் சளி, காசம், தைரொயிட் சம்பந்தமான பிரச்சினைகள் நீங்கும். முதுகெலும்புக்கூடாக செல்லும் நரம்புகள் முறுக்கேறும்.





குகா

# '20' நிறைவேறியது! அடுத்து என்ன?

இலங்கையில் பொதுஜன முன்னணி ஆட்சிபீடம் ஏறிய நாள் முதல் பெரும் சர்ச்சைக்கு உள்ளாகிய அரசமைப்பின் 20 ஆவது சட்டத் திருத்தம் பெருபான்மைப் பலத்துடன் ஒருவாறு நிறைவேற்றப்பட்டுள்ளது.

இந்தச் சட்டத் திருத்தம் மூலம் கிடைக்கும் அதிகாரங்களைக் கொண்டு நாட்டை சுபீட்சமான நிலைக்கு ஆளும் அரசு கொண்டு செல்லுமா? என்பது தான் இன்று எழும் கேள்வியாகும்.

பொதுஜன முன்னணி ஆட்சிபீடம் ஏறிய நாள் முதல் அரசமைப்பின் 20 ஆவது சட்ட வரைவு தொடர்பாக பெரும் சர்ச்சைகள் எழுந்தன.

எதிர்க்கட்சிகள் இந்த திருத்தத்துக்கு எதிராக போர்க்கொடி தூக்கின. பௌத்த பீடங்கள், கத்தோலிக்க திருச்சபை, தமிழ்த்தரப்பு எல்லாம் எதிர்ப்பு வெளியிட்டன.

என்ன விலை கொடுத்தாவது 20 ஆவது சட்ட வரைவை நிறைவேற்றியே தீருவோம் என ஆளும் தரப்பு கங்கணம் கட்டி நின்றது.

நீண்ட இழுபறிகள், எதிர்ப்புக்கள் ஆகியவற்றுக்கு மத்தியில் 20 ஆவது சட்ட வரைவு நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு, இருநாள் விவாதத்துடன் குழு நிலையில் திருத்தங்கள் செய்யப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

225 உறுப்பினர்களைக் கொண்ட நாடாளுமன்றத்தில் 156 பேரின் ஆதரவுடன் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் சட்டத்திருத்தம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

மூன்றில் இரண்டு பெரும்பாண்மை ஆதரவைப் பெறுவதில் சிக்கல்கள் ஏற்பட்ட போதும், எதிர்க்கட்சியைச் சேர்ந்த ஆறு முஸ்லிம் எம்.பிக்கள் உட்பட 8 பேரின் ஆதரவைப் பெற்று சட்டத்திருத்தம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

முஸ்லிம் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த ஹபீர் நசீர் அகமட், பைசல் காசீம், எச்.எம். எம். ஹரீஸ், எம்.எஸ். தௌபீக், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த ஏ.ஏ.எஸ்.எம்.ரஹீம், இஷாத் ரஹ்மான் மற்றும் தமிழ் முற்போக்குமுன்னணியைச்சேர்ந்த பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அ.அரவிந்தகுமார், ஐக்கிய மக்கள் சக்தியைச் சேர்ந்த டயனா கமகே ஆகியோரின் ஆதரவுடன் 20 ஆவது திருத்தம் நிறைவேறியுள்ளது.

பெரும் சர்ச்சைகளுக்கு முகம் கொடுத்து 20 ஆவது திருத்தத்தை நிறைவேற்றியதன் மூலம், ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷவுக்கு நிறைவேற்று அதிகாரங்கள் கிடைக்கப் பெற்றுள்ளன.

தனி மனிதனுக்கு இவ்வாறு அதிகாரங்கள் கைமாறுவதால் நாடு சர்வதிகாரப் போக்குடைய இராணுவப் பின்னணி கொண்ட ஜனநாயகத்துக்கு விரோதமான காட்டாட்சிக்கு வழி வகுக்கும் என எதிர்க்கட்சிகள் குரல் எழுப்பின. மாறாக அபிவிருத்தியடைந்த பொருளாதார மறுமலர்ச்சி கொண்ட நாட்டைக் கட்டி எழுப்புவதற்கே 20 ஆவது திருத்தம் கொண்டு வரப்படுகிறது என அரசாங்கத் தரப்பினரால் நியாயம் கூறப்பட்டது.

எதுவாக இருந்தாலும் நாடு எதிர்நோக்கும் இரு பெரும் சவால்களில் இருந்து நாட்டை மீட்க இந்த அதிகாரக் குவிப்பு உதவுமா? என்பதே இன்று எழுந்துள்ள கேள்வியாகும்.

முதலாவது சவால், கொரோனா என்ற கொடூர நோயின் சமூகப் பரவலாகும். வருட ஆரம்பத்தில் கொரோனா பரவல் சமூகத்தில் பெரும் தாக்கத்தைக் காட்டவில்லை ஆனால் கடந்த மாதங்களில் மினுவாங்கொட ஆடைத்தொழிற்சாலையில் இருந்து பெருக்கொடுத்த பரவல் நாடு முழுவதும் சமூகப் பரவலாகத் தீவிரமாகியுள்ளது. தினமும் பொதுச் சந்தைகள், தொழிற்சாலைகள், பாடசாலைகள், பொது இடங்கள் என பல்வேறு இடங்களில் கொரோனாவால் பீடிக்கப்பட்டவர்கள் இனங்காணப்பட்டு வருகின்றனர்.

தடுப்பு நடவடிக்கைகள் தீவிரமாக்கப்பட்டபோதும், கட்டுக்கடங்காமல் பரவிக்கொண்டிருப்பதால் மக்கள் மத்தியில் பெரும் அச்ச நிலை தோன்றியுள்ளது.

இரண்டாவது சவால் பொருளாதார நிலை மிகவும் மோசமாகியுள்ளது. கொரோனாத் தொற்றுக் காரணமாக பணிக்குச் செல்வோர் தொகை 30.40 வீதத்துக்கு குறைந்துவிட்டது.

இறக்குமதி, ஏற்றுமதி வியாபாரங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. இறக்குமதிகளுக்குத் தடை விதித்ததன் காரணமாக, மூலப்பொருள்கள். இன்றி பல தொழிற்சாலைகள் மூடப்பட்டுவிட்டன. அதேபோன்று ஏற்றுமதிகளும் பாதிக்கப்பட்டுள்ளன. அந்நியச் செலவாணியை ஈட்டிக்கொடுக்கும் ஆடைத் தொழிற்சாலைகள் மூடப்பட்டுக் கிடக்கின்றன. உல்லாசப் பயணிகள் இன்றி ஹொட்டல் வியாபாரம் முடக்கிக் கிடக்கின்றது.

நாடு எதிர்நோக்கியுள்ள இந்த இரு சவால்களில் இருந்து நாடு விடுபட 20 ஆவது திருத்தச் சட்டத்தின் கிட்டிய அதிகாரங்களை ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ஷ பயன்படுத்துவாரா? அதற்கான காய் நகர்த்தல்களை ஆரம்பிப்பாரா? என்பனவே இன்று எழுந்துள்ள கேள்விகளாகும்.

ஜனாதிபதியின் புதிய காய் நகர்த்தல்களே நாட்டைப் பாதுகாக்கும் பொறுத்திருந்து பார்ப்போம்.

# 61 குடும்பங்களுக்கு திருமலையில் நிதி

திருகோணமலை மாவட்டத்தில் வீடுகளில் சுய தனிமைப்படுத்தலில் ஈடுபடுத்தப்பட்டுள்ளவர்களுக்கு 10.6 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என்று திருகோணமலை மாவட்ட செயலர் சமன் தர்ஷன பாண்டிகோராள தெரிவித்தார்.

மாவட்ட செயலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

திருகோணமலை மாவட்டத்தில் ஆயிரத்து 61 குடும்பங்கள் சுயதனிமைப்படுத்தப்பட்டுள்ளன. அவர்களுக்கு 10 ஆயிரம் ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொருள்களை வழங்குவதற்குரிய நிதி ஒவ்வொரு பிரதேச செயலகங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

மேலும் சுகாதார நடைமுறைகளைப்பேணி நாளை முதல் திருகோணமலை பொது மீன்சந்தை திறக்கப்பட உள்ளது என்று மேலும் தெரிவித்தார். (த)

# ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவருக்கு கொரோனா

மட்டக்களப்பு, நவ. 7

மட்டக்களப்பில் 14 மற்றும் 16 வயதுகளையுடைய சிறுவர்கள் உட்பட ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவருக்கு கொரோனா வைரஸ் தொற்று கண்டறியப்பட்டுள்ளது.

இந்த நிலையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் கொரோனா பாதிப்பு 50ஆக அதிகரித்துள்ளது என கிழக்கு மாகாண சுகாதாரப் பணிப்பாளர், மருத்துவர் அழகையா லதாகரன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு செங்கலடி பிரதேசத்தில் வர்த்தக நிலையத்தில் கடமையாற்றி வரும் மட்டக்களப்பு நகரைச் சேர்ந்த ஒருவருக்கு பி.சி.ஆர். பரிசோதனையில் தொற்று உறுதிப்படுத்தப்பட்டிருந் தது.

இதையடுத்து, அவரின் குடும்பங்களைச் சோந்தவர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையிலேயே அவரது குடும்ப உறுப்பினர்கள் மூவருக்குத் தொற்று கண்டறியப்பட்டுள்ளது என்று மேலும் தெரிவித்தார். (த-இ)


## 8ம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 19.01.1950 மறைவு 07.11.2012

**சவரிமுத்து தோமஸ்**

(தொழில்நுட்பவியலாளர் - ஓமான்)

எம் வாழ்வில்
ஒவ்வொரு நாளும் உங்களை
நினைக்காத நாள் இல்லையே
எம் அன்புத் தந்தையே
எதிர்பார்க்காத பிரிவு
ஏற்றுக்கொள்ள முடியாத இழப்பு
எழுந்து வர மாட்டீர்களா அப்பா
மீண்டும் திரும்பி வர மாட்டீர்களா
அப்பா!

கெனடி வீதி, நாவாந்துறை,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

## காணி விற்பனைக்கு

உடுவில், மானிப்பாய் வீதியில்
5 1/2 பரப்பு காணி விற்பனைக்கு
உண்டு. ( பிரதான வீதியில் இருந்து
இரண்டாவது காணி)

074 076 3754

## தென்னம்பிள்ளை விற்பனைக்கு

நல்லின தென்னை நாற்றுக்களும்
குறைந்த காலத்தில் பயன்தரக்கூடிய
கூடிய தென்னை நாற்றுக்களும்
விற்பனைக்குண்டு.

077 659 2044

## பதினைந்தாம் ஆண்டு நினைவஞ்சலி

**பிலேந்திரன் ஜேம்ஸ்**



மண்ணில் 18.08.1936 விண்ணில் 07.11.2005

அன்பான எங்கள அப்பாவே
நீங்கள் இறந்து 15 ஆண்டுகள்
கடந்தாலும் எங்களின் இதயங்களில்
வாழ்ந்து கொண்டிருக்கின்றீர்கள்
உங்கள் ஆன்மா சாந்தியடையப்
பிரார்த்திக்கும்

அன்பான மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்
இலக்கம் 9 A.V வீதி, கொழும்புத்துறை.

## மரண அறிவித்தல்



பிறப்பு 27 . 10 . 1929 இறப்பு 06 . 11 . 2020

**மாட்டீன் பிலிப்பு எட்வேட்**

இளவாலை சென் ஜேம்சை பிறப்பிடமாகவும், குளமங்கால் மல்லாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட மாட்டீன் பிலிப்பு எட்வேட் அவர்கள் நேற்று (06.11.2020) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பிலிப்பு, யக்கோவா தம்பதியரின் மகனும், றோஸ்மேரியின் அன்புக் கணவரும், ஆன்பெலிசியா (ஆசிரியர், யா/யூனியன் கல்லூரி) பொன் பீலியஸ் (கனடா), சுபோதினி (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற விமலதாசன், ஜெயகௌரி (கனடா), கொலின் (ஜேர்மனி) ஆகியோரின் மாமனாரும், பெனிற்றா, புறூனோ (யா/மகாஜனாக் கல்லூரி), ஒறிற்றா (கனடா), எரிக்கா (கனடா), ஆதிரா (ஜேர்மனி), ஆன்மிகன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற அந்தோனி, மரியம்மா, றாக்கினியம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான திரேசம்மா, மலர்மணி மற்றும் இராசேந்திரம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனைகள் நாளை (08.11.2020) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் புனித சவேரியார் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
076 973 9862

தகவல்:
குடும்பத்தினர்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



வையத்துள் 19 . 06 . 1948 வானுலகில் 08 . 10 . 2020

கடந்த 08.10.2020 வியாழக்கிழமை சிவபதமடைந்த எங்கள் குடும்பத்தலைவர்

**அமரர் சின்னத்துரை தெய்வேந்திரம்**

(ஓய்வு பெற்ற உத்தியோகத்தர் , நீர்ப்பாசனத்திணைக்களம் - வவுனியா , அம்பாள் ஸ்ரோர்ஸ் - உரிமையாளர் பூந்தோட்டம் , வவுனியா )

திதி - தேய்பிறை ஸப்தமி

எம் வாழ்வில் விடிவெள்ளியாய் வசந்த வாசல் தனில்
ஒளி வீசி வாழ வழிகள் பல காட்டி - எமைப் பாசக்கரத்தால் அரவணைத்த தெய்வம் நீர் சலனம்
ஏதுமின்றி கானல் நீராய் கரைந்து போனாலும்
உம் பாச நினைவுகள் என்றும் எமைவிட்டுப் பிரியாது..

இன்று ( 07.11.2020 ) சனிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் எமது இல்லத்தில் அன்னாரின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் உற்றார் . உறவினர்கள் . நண்பர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம் .

பூந்தோட்டம்,
வவுனியா.

ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்
மனைவி, பிள்ளைகள், மருமகன்,
பேரப்பிள்ளைகள்
077 6309925

## தனிமைப்படுத்துக...

இருப்பினும் வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரின் அறிவுறுத்தல் அழுத்தம் என்பவற்றுக்கு அமைவாக தனிமைப்படுத்தலில் இருந்து பிரதேச செயலர் சில மணி நேரங்களில் விடுவிக்கப்பட்டார்.

தென்னிலங்கையிலிருந்து வருகை தந்த அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள், செயலர்கள், பணியாள் தொகுதியினர் என்று சுமார் 160 பேர் பங்கேற்ற கலந்துரையாடல் யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் நேற்று இடம்பெற்றது. இந்தக் கலந்துரையாடலை நடத்த வேண்டாம் என்று சுகாதார தரப்பினர் அறிவுறுத்தியிருந்தும் அதனை மீறியே கூட்டம் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் நெடுஞ்சாலைகள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்ணான்டோ, கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வடக்கு மாகாண ஆளுநர் திருமதி சாள்ஸ், இராஜாங்க அமைச்சர்களான சனத் நிசாந்த, ஜீவன் தொண்டமான், நால கொடகேவா, இந்திக அனுரத்த, நாடாளுமன்ற உறுப்பினர்களான சி.சிறீதரன், எம்.ஏ.சுமந்திரன், த.சித்தார்த்தன், சி.வி.விக்னேஸ்வரன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராஜா கஜேந்திரன், அங்கஜன் இராமநாதன் உள்ளிட்டோர் பங்கேற்றிருந்தனர். இந்தக் கூட்டத்தில் வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

சுகாதார நடைமுறைகளை மீறி நடைபெற்ற கூட்டம் என்பதால் அந்தப் பகுதிக்கு பொறுப்பான சுகாதார மருத்துவ அதிகாரி, கலந்துரையாடலில் பங்கேற்ற குறித்த பிரதேச செயலரை 14 நாள்கள் தனிமைப்படுதலுக்கு உட்படுத்தியுள்ளார். இது தொடர்பில் பிரதேச செயலரால் மாவட்ட நிர்வாகத்துக்கு அறிவிக்கப்பட்டது. இதனையடுத்து இந்த விடயம் வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரின் கவனத்துக் கொண்டு செல்லப்பட்டுள்ளது. அதன் பின்னர் குறித்த பிரதேச செயலர் தனிமைப்படுத்தலில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளார்.

**அச்சம்**

மேல் மாகாணத்திலிருந்து வருபவர்களை கட்டாயம் 14 நாள்கள் சுயதனிமைப்படுத்தப்பட வேண்டும் என்று அறிவித்த வடக்கு மாகாண ஆளுநரே நேற்றைய கூட்டத்தில் அமைச்சர்களுடன் பங்கேற்றிருந்தார்.

திருமண நிகழ்வுகளில் 50பேரும், இறுதிச் சடங்கில் 25 பேரும் பங்கேற்கலாம் என்றும், பொது நிகழ்வுகள், கூட்டங்கள் நடத்த வேண்டாம் என்று அறிவித்த மாவட்டச் செயலர் க.மகேசனே, 160 பேர் கலந்து கொண்ட ஒரு மீற்றர் சமூக இடைவெளி பேணப்படாத கூட்டத்தை மாவட்டச் செயலகத்தில் நடத்தியுள்ளார். சாதாரண பொதுமகன் ஒருவர் இவ்வாறு சுகாதார விதிமுறைகளை மீறினால் பாய்ந்தடித்து அவர்களுக்கு எதிராக வழக்குத் தொடுக்கும் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் இந்த விடயத்தில் நித்திரை கொள்வது ஏன் என்று பொதுமக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

அதனையும் மீறி தனிமைப்படுத்தலுக்கான நடவடிக்கை எடுத்தமையையும் தடுத்து நிறுத்துவதுதான் வடக்கு மாகாணத்தில் கொரோனா கட்டுப்பாட்டு நடவடிக்கையா என்று மக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

**திட்டமிட்ட பரவலுக்கான வாய்ப்பா?**

நேற்றைய கூட்டத்தில் பங்கேற்ற பல அதிகாரிகள் பல திணைக்களங்களைச் சேர்ந்தவர்கள். அத்துடன் யாழ்ப்பாண மாவட்ட மக்கள் பிரதிநிதிகளும் இதில் கலந்துகொண்டனர். இவர்கள் தென்னிலங்கையிலிருந்து வந்த அமைச்சர்கள், அதிகாரிகளுடன் ஒரு மீற்றருக்கும் குறைவான நெருக்கத்துடன் நேற்றைய கூட்டத்தில் பங்கேற்றிருந்தனர். இந்த நிலையில் தென்னிலங்கையிலிருந்து வந்த யாராவது ஒருவருக்கு கொரோனாத் தொற்று இருந்திருந்தால், கூட்டத்தில் பங்கேற்ற வடக்கு அதிகாரிகள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் என்று பலருக்கும் பரவ வாய்ப்புள்ளது. அத்துடன் இவர்கள் ஊடாக யாழ்ப்பாணத்திலுள்ள மக்களுக்கும் பரவுவதற்கு சந்தர்ப்பம் உள்ளது. யாழ்ப்பாணத்தில் கொரோனா கொத்தணியை திட்டமிட்டு உருவாக்கும் நோக்குடனா, சுகாதாரத் திணைக்களத்தின் அறிவுறுத்தலையும் மீறி கூட்டம் நடத்தப்பட்டதா என்று மக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர். (ஒ,5)

## மக்களைச்...

சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க ஆகியோர் மேலும் தெரிவித்ததாவது:

"இலங்கையில் கொரோனா வைரஸின் மூன்றாம் அலை கடும் வீரியத்துடன் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தி வருகின்றது. நாடெங்கும் கொரோனா கொத்தணிகள் வியாபித்து அவை சமூகத் தொற்றாகி வீடுகளுக்குள் புகுந்துள்ளன. நாட்டில் கொரோனாவின் மூன்றாவது அலைக்குள் மாத்திரம் சிக்கி இதுவரை 9 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அதேவேளை, கொரோனாவின் முதலாம், இரண்டாம், மூன்றாம் அலைகளுக்குள் சிக்கி மொத்தமாக 12 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டுள்ளனர். 30 பேர் உயிரிழந்துள்ளனர்.

நாடெங்கும் தற்போதும் மூன்றாவது அலை உச்சக்கட்டமாகப் பாதிப்பை ஏற்படுத்தி வருகின்றது. இந்த அலையில் தான் அதிகமானோர் பாதிக்கப்பட்டுள்ளனர். நாள்தோறும் நூற்றுக்க ணக்கான தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டு வருகின்றனர். கடந்த இரு வாரங்களில் மாத்திரம் 17 பேர் உயிரிழந்துள்ளனர்.

ஆனால், இது தொடர்பில் அரசு அசமந்தப்போக்கில் செயற்படுகின்றது. மேல் மாகாணத்தை மட்டும் எதிர்வரும் 9 ஆம் திகதி வரை முடக்கி வைத்துள்ளது. 9ஆம் திகதிக்குப் பின்னர் மேல் மாகாணத்தையோ அல்லது முழு நாட்டையோ முடக்க வேண்டிய அவசியம் இல்லை என்று ஜனாதிபதியும், இராணுவத் தளபதியும் அறிவித்துள்ளனர்.

அதற்கு அவர்கள் சொல்லும் காரணம் சிறுபிள்ளைத்தனமாக உள்ளது. மக்களின் வாழ்வாதாரத்துக்கு நிவாரணப் பொருள்களை வழங்குவது அரசின் கடமை. அதேவேளை, மக்களின் உயிர்களைக் காப்பாற்றுவதும் அரசின் கடமை.

கொரோனாத் தொற்று உயிர்ப்பலியை எடுத்து வருகின்ற இந்த நிலையிலும் முழு நாட்டையும் முடக்காமல் அரசு திறந்து வைத்திருக்கின்றது. எனவே, கொரோனாவுக்குள் மக்களைச் சாகடிக்காமல் முழு நாட்டையும் குறைந்தது இரு வாரங்களுக்காவது முடக்கி தொற்றுப் பரவலுக்குள் அரசு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்.

மக்களின் ஆணையுடன் ஆட்சிக்கு வந்த அரசு, கொரோனா என்ற கொடிய தொற்று நோய்க்குள் அவர்களைச் சாகடிப்பது மாபெரும் குற்றமாகும். இதை உணர்ந்து அரசு செயற்பட வேண்டும்" என்றனர். (த22)

## சாவுகளை...

கொரோனா வைரஸ் தொற்றுப் பரவலுக்கு நாம் முற்றுப்புள்ளி வைக்க முடியும்." என்று கொரோனாத் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மையத்தின் தலைவரும் இராணுவத் தளபதியுமான லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார். இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் இதுவரை 30 பேர் உயிரிழந்துள்ளனர். கடந்த புதன்கிழமை மாத்திரம் ஒரே நாளில் 5 பேர் உயிரிழந்துள்ளனர். அவர்களில் மூவர் வீட்டிலேயே உயிரிழந்துள்ளனர்.

இந்த அவலத்துக்கு மத்தியிலும் நாட்டை இன்னமும் அரசு முற்றாக முடக்கவில்லை. இது தொடர்பில் கொரோனாத் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மையத்தின் தலைவர் சவேந்திர சில்வாவிடம் வினவியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

"இலங்கையில் கொரோனா வைரஸின் மூன்றாம் அலை எமக்குச் பெரும் சவாலாக உள்ளது. எனினும், இதை எம்மால் விரைவில் கட்டுப்படுத்த முடியும். இதில் நாம் உறுதியாக உள்ளோம். ஆனால், இதன்போது உயிரிழப்புகளையும் நாம் சந்திக்க வேண்டிவரும். அதாவது பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்படாதவர்கள் தொற்றின் தாக்கத்தால் வீட்டிலேயே இறக்கின்றார்கள். இது தவிர்க்க முடியாத நிலைமை.

கொரோனாவால் நாட்டின் பல இடங்களில் முடக்கல் நிலையை ஏற்படுத்தியுள்ளோம். இந்த முடக்கல் நிரந்தரம் இல்லை. படிப்படியாக முடக்கலைத் தளர்த்துவோம். முழு நாட்டையும் முடக்கல் நிலை யில் வைத்திருக்கும் எண்ணம் எம்மிடம் இல்லை. எத்தனையோ மக்கள் நாளாந்த வாழ்வாதாரத்தை நம்பியே வாழ்கின்றார்கள்"- என்றார். (த-22)

## கொரோனாவால்...

ரிழந்துள்ளார்.

கொழும்பு 15, மோதரையைச் சேர்ந்த 23 வயதுடைய இளைஞரே உயிரிழந்துள்ளார். கொழும்பு தேசிய தொற்று நோயியல் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்த அவர், சிகிச்சை பயனளிக்காது உயிரிழந்துள்ளார்.

இவர் நீரிழிவு நோயாலும் பாதிக்கப்பட்டிருந்தார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவரின் இறப்பையடுத்து இலங்கையில் கொரோனாத் தொற்றால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 30ஆக உயர்ந்துள்ளது. (த-22)

## நேற்றும்...

கொழும்பு, நவ. 7

இலங்கையில் நேற்றும் 400 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதையடுத்து நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளானவர்களின் மொத்த எண்ணிக்கை 12 ஆயிரத்து 970 ஆக உயர்வடைந்துள்ளது.

அவர்களில் 5 ஆயிரத்து 754 பேர் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். 7 ஆயிரத்து 186 பேர் குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர். அதேவேளை, 30 பேர் சிகிச்சை களின் போது உயிரிழந்துள்ளனர். (த-22)

## மானிப்பாய்...

கடையிலிருந்து பொருள்களையும் அடித்துச் சேதப்படுத்தியுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அந்தக் கும்பலில் ஒருவர் இராணுவத்தினரிடம் சிக்கிக்கொண்டார் என்றும் அவர் விசாரணையில் உள்ளார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

அந்தக் கும்பல் பயணித்ததாகக் கூறப்படும் மோட்டார் சைக்கிள் ஒன்றும் அந்த இடத்தில் கைவிடப்பட்ட நிலையில் பொலிஸாரால் மீட்கப்பட்டது. ஒருவர் பிடிபட ஏனையோர் தப்பிச் சென்றுள்ளனர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர் . (த-26)

## சோளம்....

னர். அநுராதபுரம் பகுதியைச் சேர்ந்த அவர், சோளk; வியாபாரத்தில் ஈடுபடுபவர் என்றும் வியாபார நோக்கில் வந்திருந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என்றும் கனகராயன்குளம் பொலிஸார் தெரிவித்தனர். இறப்புக்கான காரணம் தெரியவில்லை. சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக வவுனியா மாவட்ட பொது மருத்துவமனையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. விசாரணை நடக்கின்றது என்று பொலிஸார் தெரிவித்தனர். (த-18)

## 15 நாள்களில்...

திக்குள் 17பேர் கொரோனாத் தொற்றால் உயிரிழந்துள்ளனர் என்று சுகாதார அமைச்சின் தொற்றுநோய் விஞ்ஞானப் பிரிவு தெரிவித்துள்ளது.

இலங்கையில் ஒரே நாளில் அதிகளவான தொற்றாளர்கள் (866 பேர்) கடந்த 23 ஆம் திகதி அடையாளம் காணப்பட்டனர்.

ஒரே நாளில் அதிகளவானவர்கள் (765 பேர்) நேற்றுமுன்தினம் குணமடைந்தனர். (எ-44)

## கொலையாளிக்கு...

வவுனியா மேல்நீதிமன்று.

அவர் நீதிமன்ற விசாரணைக்கு முற்படாது தலைமறைவாகியுள்ளார். அவர் இன்றியே விசாரணை நடத்தப்பட்டு அவர் குற்றவாளியாக மன்றால் இனம் காணப்பட்டார். அதன்படி மேற்குறித்த தண்டனையை அறிவித்த மேல்நீதிமன்று, அவரைக் கைதுசெய்யுமாறும் பிடியாணை பிறப்பித்தது.

வவுனியா செட்டிகுளம் மெனிக்பாம் பகுதியில் 2005 ஆண்டு காலப்பகுதியில் மாமனாருக்கும் மருமகனுக்கும் இடையேயான பணக் கொடுக்கல் வாங்கல் தகராறே கொலையில் முடிந்திருந்தது.

மருமகனுக்கு எதிராக 2018 ஆண்டு சட்டமா அதிபர் திணைக்களம் வவுனியா மேல்நீதிமன்றில் குற்றப் பகிர்வுப் பத்திரம் தாக்கல் செய்திருந்தது. அதன்படி மேற்படி தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. (த-ரி3)

## ஜனவரி...

வுள்ளது என்று கல்வி அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

ஜனவரி 28 ஆம் திகதி வரை அந்தப் பரீட்சையை நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று அமைச்சு மேலும் தெரிவித்தது. (த-இ)

# 'சில்' டொனால்ட் 'சில்'!

## தோல்வியின் விளிம்பில் நிற்கும் ட்ரம்புக்கு சமூக செயற்பாட்டாளர் கிரைட்டா பதிலடி!

**வொஷிங்டன், நவ. 7**
**டொனால்ட் ட்ரம்ப் தன்னுடைய கோபத்தைக் கட்டுப்படுத்த வேண்டும் என அறிவுரை வழங்கியுள்ளார் சுவீடனைச் சேர்ந்த காலநிலை மாற்ற செயற்பட்டாளர் கிரைட்டா தன்பேர்க்.**




வாக்குகள் எண்ணுவதை நிறுத்துங்கள் என ட்ரம்ப் பதிவிட்ட ருவிட்டர் பதிவுக்கு பதிலடியாகவே அவர் தனது ருவிட்டர் பக்கத்தில் இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார். அதில் அவர் தெரிவித்துள்ளதாவது, இது மிகவும் அபத்தனமானது.
டொனால்ட் தனது கோபத்தைக் கட்டுப்படுத்துவதற்கான பயிற்சிகளில்ஈடுபடவேண்டும். கோபத்தைக் குறையுங்கள் டொனால்ட், கோபத்தை குறையுங்கள். நண்பருடன் பழைய பாணியிலான திரைப்பட மொன்றுக்குச் செல்லுங்கள் என தன்பேர்க் தெரிவித்துள்ளார்.
தன்பேர்க் ஒரு பதின்ம வயதுச் சிறுமி. காலநிலை மாற்றத்துக்கு எதிராக அவர் செயற்பட்டு வருகின்றார். புவி வெப்பமாவதைத் தடுக்க உலக நாடுகள் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என்று தன்பேர்க் வலியுறுத்தி வருகின்றார். உலகமெங்கும் தன்பேர்க்குக்கு ஆதரவாளர்கள் உள்ளனர். தன்பேர்கின் முயற்சிகளுக்கு ட்ரம்ப் பெரும் முட்டுக்கட்டை போட்டார். தன்பேர்க்கை கடுமையாக விமர்சித்தார். உலகம் வெப்பமாதலைத் தடுக்கும் பரிஸ் ஒப்பந்தத்தில் இருந்து அமெரிக்காவை வெளியேற்றினார். இதற்கெல்லாம் பதிலடியாகவே கிரைட்டா தற்போது கருத்துத் தெரிவித்துள்ளார் என்று கருதப்படுகின்றது.
ட்ரம்ப் அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் தோல்வியடைந்து பைடன் வெற்றிபெற்றால் அமெரிக்கா பரிஸ் ஒப்பந்தத்தில் இணையும் என்பது கிரைட்டாவின் எதிர்பார்ப்பாகும். (வ-இ)



# கல்வான் முறுகல் நிலை இந்தியா – சீனா பேச்சு!

புதுடில்லி, நவ. 7
கல்வான் பள்ளத்தாக்கு முறுகல் நிலையைத் தொடர்ந்து இந்தியா - சீனா இடையே 8ஆவது சுற்றுப் பேச்சு கிழக்கு லடாக்கில் நேற்று ஆரம்பித்துள்ளது.
இந்தியா - சீனா இடையிலான எல்லைப்பிரச்சினை முன்னெப்போதும் இல்லாத வகையில் தீவிரமடைந்துள்ளது.
கல்வான் பள்ளத்தாக்கு மோதலைத் தொடர்ந்து எல்லையில் இரு நாடுகளின் படைகளும் குவிக்கப்பட்டதால் அங்கு பதற்றம் அதிகரித்துள்ளது. படைகளைக் குறைத்து பதற்றத்தைத் தணிக்கவும், எல்லையில் முன்பு இருந்த நிலைமையை பராமரிப்பது தொடர்பாகவும் படைப்பிரிவு கட்டளை அதிகாரிகள் மட்டத்தில் தொடர்ந்து பேச்சு நடத்தப்பட்டு வருகிறது. இதுவரை 7 சுற்றுகள் பேச்சு நடத்தப்பட்டும் எந்த முடிவும் எட்டப்படவில்லை. இதனையத்து, 8ஆம் சுற்று பேச்சு கிழக்கு லடாக்கில் நேற்று தொடங்கியுள்ளது. (வ-ரி4)

முதலாம் பக்கத் தொடர்ச்சி

### அடிக்கச் சென்றவர்...

ளார். அவர் மீது தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறியமைக்காக சட்டநடவடிக்கைளும் எடுக்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
இந்தச் சம்பவம் பருத்தித்துறையில் நடந்துள்ளது. கொரோனா வைரஸ் தொற்றாளருடன் தொடர்பில் இருந்தனர் என்று கருதப்படும் ஐந்து பேர் பொதுச் சுகாதாரப் பரிசோதகரால் ஒரிடத்தில் தனிமைப்படுத்தப்பட்டிருந்தனர்.
சந்தேகநபர், நேற்றுமுன்தினம் இரவு அந்த வளாகத்துக்குள் சென்று, தனிமைப்படுத்தலில் உள்ள ஒருவரைத் தாக்க முயன்றுள்ளார். கற்களையும் வீசியுள்ளார். சம்பவத்தை அறிந்து பொலிஸார் வந்தபோது, அந்த நபர் தப்பியோடியுள்ளார்.
இந்தச் சம்பவத்தை தனிமைப்படுத்தலில் உள்ள இன்னொருவர் கைபேசியில் பதிவு செய்துள்ளார். அதை அந்தப் பகுதி பொதுச் சுகாதாரப் பரிசோதகருக்கு அனுப்பியுள்ளார்.
காணொலியின் அடிப்படையில் தாக்குதல் நடத்தியவர் இனங்காணப்பட்டார். அதையடுத்து அந்த நபர் குடும்பத்தோடு வீட்டில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளார்.
தனிமைப்படுத்தப்பட்டுள்ளவர்களைப் பாதுகாக்க வேண்டிய கடமை பொதுமக்களுக்கு உரியது. தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் தெரிவித்தனர். (எ-9)

### இன்று 12 மணியிலிருந்து...

கோவில் மணிகளை ஒலிக்கச் செய்யுங்கள் என்று நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம் மற்றும் அகில இலங்கை இந்துமாமன்றம் என்பன கூட்டாகக் கோரியுள்ளன. , நல்லை ஆதின குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத சோமசுந்தர ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள், கலாநிதி ஆறு திருமுருகன், ரிஷி சுவாமிகள் ஆகியோர் இணைந்து, நல்லை ஆதீனத்தில் நேற்று மாலை செய்தியாளர் சந்திப்பை ஏற்பாடு செய்திருந்தனர். அதில் நல்லை ஆதீன முதல்வர் மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்தனர்.
கோவில்களில் பக்தர்கள் கூடுவதைத் தவிர்த்து வீடுகளில் அமைதியாகப் பிரார்த்தியுங்கள் என்றும் அவர்கள் கோரினர். கொரோனா எனும் ஆபத்தான நோயின் அவலம் 3ஆவது அலையாக அதிகரிக்கும் வேளையில் பொதுமக்கள் மிகக்கவனமாக உங்களை நீங்களே பாதுகாத்துக்கொள்ளுங்கள். தனியாள் இடைவெளி பேணி நடந்துகொள்ளுங்கள்.
கோவில்களில் நித்திய நைமித்திய பூசை வழிபாடுகள் நடைபெற வேண்டும். அதற்கு இடையூறு இன்றி ஒத்துழைப்பு வழங்குங்கள். சிறுவர்கள், முதியோர், நோயாளர்கள் வீட்டைவிட்டு வெளியே வருவதை இயன்றவரை தவிர்த்து வீடுகளில் பாதுகாப்பாக இருங்கள்.
சுகாதாரப் பகுதியினரின் அறிவுறுத்தல்களுக்கு முக்கியத்துவம்கொடுத்து, நோயுற்றவர்களுக்கு உதவும் சுகாதார சேவையினரின் பாதுகாப்புக்கு அனைவரும் உதவவேண்டும். அவர்களுக்காகவும் கடவுளிடம் வேண்டுங்கள். இந்தக் கொடிய நோய் உலக மக்களை விட்டு அகலவேண்டும் என்று கோவில்களிலும் அனைத்து மக்களும் பிரார்த்தனை செய்வதற்கு கோவில் நிர்வாகிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும்.
கொரோனாவை அழிக்கும் பிரார்த்தனையில் ஏனைய மதத்தவர்களும் இணைய வேண்டும். என்றும் அவர்கள் வலியுறுத்தினர். (து-ரி4,20)

# மீண்டும் பிரதமராகப் பதவியேற்ற ஜெசிந்தா

வெலிங்டன், நவ. 7
நியூசிலாந்தின் பிரதமராக ஜெசிந்தா ஆர்டென் 2ஆவது முறையாக பதவியேற்றுக் கொண்டார்.
ஒக்ரோபர்17ஆம் திகதி நடைபெற்ற நாடாளுமன்ற தேர்தலில் 50 சதவீதத்துக்கும் அதிகமான வாக்குகளைப் பெற்ற ஜெசிந்தா ஆர்டெனின் தொழிலாளர் கட்சி, மொத்தம் உள்ள 120 இடங்களில் 65 இடங்களைக் கைப்பற்றி அமோக வெற்றிபெற்றது.
இதனையடுத்து வெலிங்டனில் நேற்று நடைபெற்ற விழாவில், நாட்டின் பிரதமராக தொடர்ந்து 2ஆவது முறையாக ஜெசிந்தா ஆர்டென் பதவியேற்றுக்கொண்டார். (வ-இ)



போதைக்கு எதிரான நடவடிக்கையில்

# 8 ஆயிரம் பேர் கொல்லப்பட்டனர்

## பிலிப்பைன்ஸ் அறிவிப்பு

2016 ஆம் ஆண்டு முதல் பிலிப்பைன்ஸில் போதைப்பொருளுக்கு எதிரான நடவடிக்கையில் சுமார் 8 ஆயிரம் பேர் கொல்லப்பட்டுள்ளனர் என பிலிப்பைன்ஸ் தகவல் முகாமை நேற்று முன்தினம் வியாழக்கிழமை வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளது.
2016 ஜூலை முதல் 2லட்சத்து 34 ஆயிரத்துக்கும் மேற்பட்ட சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இதன்போது 3லட்சத்து 57 ஆயிரத்துக்கும் மேற்பட்ட நபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.
8 ஆயிரம் பேர் கொல்லப்பட்டுள்ளனர் என பிலிப்பைன்ஸின் தேசிய காவல்துறை ஆணையாளர் சுட்டிக்காட்டியுள்ளார். இந்த சோதனை நடவடிக்கைகளின்போது குறைந்தது 1.29 மில்லியன் பேர் சரணடைந்துள்ளனர் எனவும் சட்டவிரோத போதைப்பொருள் நடவடிக்கைகளுக்கு எதிராக நாங்கள் தொடர்ந்தும் செயற்படுவோம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.
பிலிப்பைன்ஸில் போதைப்பொருளுக்கு எதிரான சட்ட நடவடிக்கைகள் 2016 ஜூன் அன்று ரொட்ரிகோ துதெர்த்தே ஜனாதிபதியாக பதவியேற்றதன் பின்னர் ஆரம்பமாகியுள்ளது.
இந்த நடவடிக்கை போதைப்பொருளை கட்டுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டிருந்தபோதும், மனித உரிமை குழுக்களால் இவை கடுமையாக விமர்சிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.
மனித உரிமைகள் கண்காணிப்பகம் துதெர்த்தே போதைப்பொருள்களுக்கு எதிரான போரில் 12 ஆயிரத்துக்கும் மேற்பட்ட உயிர்களைக் கொலை செய்துள்ளார் என்று குற்றம் சாட்டியுள்ளது. (வ-இ)

# ஜனாதிபதி ஆணைக்குழுவும் பணத்தை ஏப்பமிடுகின்றது!

## லஞ்ச ஊழல் ஆணைக்குழுவில் சஜித் அணி எம்.பிக்கள் முறைப்பாடு

கொழும்பு, நவ. 7

அரசியல் பழிவாங்கல் தொடர்பில் பரிசீலனைகள் செய்துவரும் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு, மக்களின் பணத்தை முறைகேடாகப் பயன்படுத்தி வருகின்றது என்றும் அதற்கு எதிராக இலஞ்சம் மற்றும் ஊழல் தொடர்பான சட்டவிதிகளுக்கமைய சட்டநடவடிக்கை எடுக்கவேண்டும் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் வலியுறுத்தியுள்ளனர். நடவடிக்கை எடுக்குமாறு கோரி இலஞ்சம் மற்றும் ஊழல் தொடர்பான விசாரணை ஆணைக்குழுவில் முறைப்பாடு அளித்துள்ளனர் என கட்சியின் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

ஊடகப்பிரிவு மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:

அரசியல் பழிவாங்கல் தொடர்பில் விசாரணைகளை நடத்துவதற்காக நியமிக்கப்பட்டுள்ள ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு நாட்டின் சட்டவிதிகளுக்கு புறம்பாக செயற்பட்டு வருவதாகவும், அது சுயாதீன சட்டத்துறையின் செயற்பாடுகளில் தலையீடு செலுத்தும் வகையில் செயற்பட்டு வருவதாகவும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதேவேளை, மேல் நீதிமன்றத்தில் இடம்பெற்று வரும் வழக்குகள் தொடர்பிலும், அது சார்ந்த சாட்சியங்கள் தொடர்பிலும் அங்கு பரிசீலனை செய்யப்படுவதாகவும் தெரிவித்துள்ளனர். இத்தகைய செயற்பாடுகளினால் நீதித்துறைக்கு ஏற்படும் சவால்கள் தொடர்பிலும் ஆணைக்குழுவின் கவனத்துக்கு கொண்டு சென்றுள்ளனர்.

இதுதவிர, ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு மக்களின் வரிப் பணத்தில்தான் இயங்கி வருகின்றது. இந்த நிலையில் அது மக்களின் பணத்தை முறைக்கேடாக பயன்படுத்தி வருவதாகவும்,

அதற்கு எதிராக இலஞ்சம் மற்றும் ஊழல் தடுப்பு சட்டவிதிகளுக்கமைய சட்டநடவடிக்கை எடுக்குமாறும் கேட்டுக் கொண்டுள்ளனர்.

இதன்போது, இலஞ்சம் மற்றும் ஊழல் தொடர்பான விசாரணை ஆணைக்குழுவுக்கு நேற்று வெள்ளிக் கிழமை சென்ற நாடாளுமன்ற உறுப்பினர்களான ஹரின் பெர்னாண்டோ, மயாந்த திசாநாயக்க,

நளின்பண்டார, ஜே.சீ. அலவத்துவல மற்றும் சுஜித் சஞ்சய பெரேரா ஆகியோரே இவ்வாறு முறைப்பாடு அளித்துள்ளனர்- என்றுள்ளது.

(து- இ)

# பெங்களூரை வெளியேற்றியது ஹைதராபாத்



அபுதாபி, நவ. 7

ஐ.பி.எல் கிரிக்கெட் தொடரின் நேற்று நடைபெற்ற விலகல் போட்டியில் பெங்களூரை 6 இலக்குகள் வித்தியாசத்தில் வீழ்த்தி இரண்டாவது தகுதிகாண் போட்டிக்குள் நுழைந்தது ஹைதராபாத்.

அபுதாபியில் நடைபெற்ற ஆட்டத்தில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற ஹைதராபாத் அணி முதலில் களத்தடுப்பை தேர்வு செய்தது. முதலில் களமிறங்கிய பெங்களூர் அணிக்கு கோலி, படிக்கல் இணை அதிர்ச்சி ஆரம்பம் வழங்கியது. இருவரும் ஒற்றை இலக்கங்களுடன் பவிலியன் திரும்பினர். தொடர்ந்து ஜோடி சேர்ந்த பிஞ்ச், வில்லியர்ஸ் இணை 41 ஒட்டங்களை இணைப்பாட்டமாக பெற்றவேளை பிஞ்ச் 32 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். மத்திய வரிசையில் வில்லியர்ஸ் சிறப்பாக ஆடினாலும் பின்வரிசையில் எவரும் சோபிக்காததால் இருபது பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 7 இலக்குகளை இழந்து 131 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில் அதிகபட்சமாக வில்லியர்ஸ் 56 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் ஹோல்டர் 3 இலக்குகளையும் நடராஜன் 2 இலக்குகளையும் நதீம் ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

132 என்ற இலக்கை நோக்கி பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ஹைதராபாத் அணிக்கு வோர்ணர், ஹோஸ்வாமி இணை ஆரம்பம் வழங்கியது. வந்த வேகத்தில் நடையைக்கட்டினார் ஹோஸ்வாமி. அடுத்து களம் புகுந்த மனிஷ் பாண்டே(24), கராக்(7) ஓட்டங்களுடன் ஏமாற்றினாலும் அடுத்து ஜோடி சேர்ந்த ஹோல்டர், வில்லியம்சன் இணை அணியை வெற்றிக்கு அழைத்துச் சென்றது. இறுதியில் இரு பந்துகள் மீதமிருக்க வெற்றியிலக்கை அடைந்தது ஹைதராபாத் அணி. துடுப்பாட்டத்தில் வில்லியம்சன்(50), ஹோல்டர்(24) ஓட்டங்களையும் பந்துவீச்சில் சிராஜ் 2 இலக்குகளையும் ஷாம்பா, சஹால் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர். போட்டியின் ஆட்டநாயகனாக வில்லியம்சன் தெரிவுசெய்யப்பட்டார்.

இவ்வெற்றியின் மூலம் இரண்டாவது தகுதிகாண் போட்டிக்கு முன்னேறியுள்ள ஹைதராபாத் அணி நாளைய தினம் டெல்லி கப்பிடல்ஸ் அணியுடன் மோதவுள்ளது. (ரி)

லொக்டவுன் வந்தால் என்ன செய்வீர்கள்?
காத்திருக்காமல் உடனே பதியுங்கள்
அமெரிக்க லொத்தர் இலவச வீசா
இன்னும் 03 நாட்களே
2022ல் நீங்களும் அமெரிக்காவில்
இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற அரிய சந்தர்ப்பம்
18 வயதிற்கு மேற்பட்ட யாரும் தனியாக விண்ணப்பிக்கலாம்
இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற இரண்டு வாய்ப்புக்கள்
இந்த வருடம் A/L எடுக்கிறவர்களும் விண்ணப்பிக்கலாம்
V2 Travels
0768226241

**காணி தேவை**
கந்தர்மடம் சந்தியிலிருந்து உரும்பிராய்ச் சந்திக்கு இடைப்பட்ட பிரதேசங்களில் சுமார் 2 பரப்பிலிருந்து 10 பரப்பு அளவுடைய காணிகள் தேவைப்படுகின்றது.
பலாலி வீதி, K.K.S வீதிக்கு அண்மித்த பகுதிகள் விரும்பத்தக்கது.
தரகர் அற்ற நேரடித் தொடர்பு
தொடர்புகளுக்கு: 076 072 1245

**மணமகள் தேவை**
யாழ் இந்து கௌரவ குடும்ப 39 வயது 4இல் சூரியன் + செவ்வாய் சொந்தமாக தொழில் புரியும் மணமகனுக்கு மணமகள் தேவை.
தொடர்பு: 077 9476102

**தனியார் நிறுவனமொன்றில் பணிபுரிவதற்கு**
**வேலையாட்கள் தேவை**
Drivers மற்றும் Machinary இல் வலை செய்யக்கூடியவர்கள் சுய விவரக் கோவையை தபால் அல்லது email மூலம் அனுப்பவும்.
987/2, K.K.S. Road, Jaffna.
email:nobertpriska2019@gmail.com
Phone Number:077 0030 442

**காணி விற்பனைக்கு உண்டு**
யாழ்ப்பாணம் பலாலி றோட் கோண்டாவிலில் 5 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. தரகர் தேவையில்லை. பிரித்து கொடுக்கப்படும். 1 1/2 பரப்பாக. (கோண்டாவில் சந்திக்கு அருகாமை.
தொடர்பு:
077 6234 204, 077 505 8561

**காணி விற்பனைக்கு உண்டு**
யாழ்ப்பாணம் ராசபாத வீதியில் மெயின் றோட்டுடன் 1 3/4 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
தரகர் தேவையில்லை.
தொடர்பு: குரு
077 80 51 655

**காணி விற்பனைக்கு உண்டு**
யாழ்ப்பாணம் ஊரெழு ஆனந்த கானம் பகுதியில் 44 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. 2 3/4 பரப்பு பிரித்து கொடுக்கப்படும். (கரந்தன் (ராசா கடை அருகாமை)
தரகர் தேவையில்லை.
தொடர்பு:
076 6400 974, 077 8949 549

# அருகிலுள்ள வீடுகளுக்கு செல்வதைத் தவிர்க்கவும்

## தொடர்மாடிக் குடியிருப்பில் உள்ளோருக்கு அறிவுறுத்து

கொழும்பு, நவ. 7

கொழும்பில் தொடர்மாடி குடியிருப்புகளில் வசிப்போர், அருகிலுள்ள வீடுகளுக்குச் செல்வதைத் தவிர்க்குமாறு தொற்றுநோயியல் பிரிவு கோரிக்கை விடுத்துள்ளது.

அடுக்கு மாடி குடியிருப்புக்களில் பரிசோதனைக்கு உட்படுத்தப்படாத கொரோனாத் தொற்றாளர்கள் இருக்கலாம் என்று தொற்றுநோயியல் பிரிவின் தலைவர் மருத்துவர் சுதத் சமரவீர தெரிவித்துள்ளார்.

இங்கு பல தொற்றாளர்கள் ஏற்கனவே அடையாளம் காணப்பட்டுள்ளனர். மேலும் அதிகமான கொரோனாத் தொற்றாளர்கள் ஒரே நிலையில் இருக்கக்கூடும். எனவே, தொடர்மாடி வீட்டுத் தொகுதிகளில் வசிக்கும் மக்களும், நெரிசலான பகுதிகளில் வசிப்பவர்களும் பிற வீடுகளுக்குச் செல்வதை முற்றிலுமாக நிறுத்துமாறு அறிவுறுத்தப்படுகின்றனர்.

இவ்வாறான செயற்பாடுகள் காரணமாக வீடுகளில் உள்ள முதியவர்கள் பாதிப்படைந்து உயிரிழக்கும் அபாய நிலை ஏற்பட்டுள்ளது என்றும் மருத்துவர் எச்சரித்துள்ளார். (து-இ)

எங்கிருந்தும் கற்றுக்கொள்ளுங்கள்
**Full-stack Web Development**
மென்பொருள் கம்பனியில் இணைந்து மென்பொருள் அபிவிருத்தியாளர் ஆகவேண்டுமா? அல்லது ஒரு தொழில்நுட்பம் சார்ந்த கம்பனியை ஆரம்பிக்கவேண்டுமா?
5 மாதங்களுக்கான 100% இணையவழிக்கற்கை.
தகைமை : க. பொ. த உயர்தரப் பரீட்சைக்கு தோற்றி இருத்தல் மற்றும் ஒரு நாளில் 6 மணித்தியாலங்கள் செலவிடக்கூடியதாக இருத்தல்.
மொழிமூலம்: தமிழ்

விண்ணப்ப முடிவுத்திகதி 14.11.2020
UKI
விண்ணப்ப படிவங்களை பெற்றுக் கொள்ள www.uki.life என்ற இணையத்தளத்தினை பார்வையிடவும்.
மேலதிக தகவல்களுக்கு
www.uki.life info@uki.life 0775694587



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 07.11.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.